வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk மலர் : 03 04.07.2022 திங்கட்கிழமை இதழ் : 210 பக்கங்கள் : 16

# எரிபொருளுக்கான நெருக்கடி 10ஆம் திகதிக்கு பின் குறையும்!

## எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர



- 3 டீசல் உட்பட 4 கப்பல்கள் வருகின்றன
- பெற்றோல், ம. எண்ணெய் மலேசியா தரும்!

கொழும்பு, ஜூலை 04

10ஆம் திகதிக்கு பின்னர் நாட்டில் எரிபொருள் நெருக்கடி குறையும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அத்துடன், வரும் 8 அல்லது 9ஆம் திகதியில் ஒரு கப்பலும், 11 - 14ஆம் திகதிளுக்குள் மற்றொரு கப்பலும் மூன்றாவது கப்பல் 15 - 17ஆம் திகதிகளுக்குள்ளுமாக 3 கப்பல்களில் டீசல் நாட்டை வந்தடையவுள்ளன. பெற்றோல் கப்பல் 22 அல்லது 23ஆம் திகதியும் நாட்டை வந்தடையும்.

15

# நாட்டை முடக்கும் திட்டம்; ஆராய்கிறது அரசாங்கம்!

கொழும்பு, ஜூலை 04

**நாட்டை தற்காலிகமாக முடக்குவது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. எனினும், இது குறித்து இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று அரச உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.**

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அதிகளவு மக்கள் வரிசைகளில் நிற்கின்றனர். இந்த வரிசைகளால் தினமும் நெருக்கடிகளும் பிரச்னைகளும் போராட்டங்களும் ஏற்பட்டவண்ணம் உள்ளன.

இவ்வாறான காரணங்களால் அத்தியாவசிய சேவையில் ஈடுபடுபவர்களால் எரிபொருட்களை பெற முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இதனிடையே 10ஆம் திகதிக்கு பின்னர் நாட்டுக்கு தொடர்ச்சியாக எரிபொருள் கிடைக்கவுள்ளது. இதனால், அதுவரை நாட்டை முடக்குவது குறித்து அரசாங்கம் ஆராய்கிறது.

நாட்டை முடக்குவதன்

15

# ஜனாதிபதி தலைமறைவு; சந்திம வீரக்கொடி சாடல்!

கொழும்பு, ஜூலை 04

கோட்டாபய ராஜபக்ஷ இன்று தலைமறைவான ஜனாதிபதியாகி உள்ளார் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

இன்று ஆளும் கட்சி உறுப்பினருக்கே ஜனாதிபதியை சந்திக்கும் சந்தர்ப்பம் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மக்கள் பிரச்னைகளை ஜனாதிபதியிடம் கொண்டு செல்வதற்கு ஒரே வழி ஊடகங்களே. ஆனால் இன்று

15

# சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இன்று முதல் வேலைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், ஜூலை 04

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இன்று திங்கட்கிழமை முதல் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர் என்று அறிவித்துள்ளனர்.

தமக்கான எரிபொருள் வழங்கல் சீராக இடம்பெறும் வரை இந்தப் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் தொடரும் என்று சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் அறிவித்துள்ளது. (ஐ)

# ரம்புட்டான் பழம் விழுங்கிய சிறுவன் மூச்சுத்திணறி பலி!

## மாவிட்டபுரத்தில் நேற்று சோகம்

மாவிட்டபுரம், ஜூலை 04

ரம்புட்டான் பழத்தை விழுங்கிய 10 வயதுச் சிறுவன் பரிதாபமாக உயிரிழந்தார்.

மாவிட்டபுரம் - கொல்லன்கலட்டியைச் சேர்ந்த தர்மராசா தர்சிகன் (வயது-10) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் ரம்புட்டான் பழத்தை விழுங்கிய சிறுவன் மூச்சு எடுக்க அவதிப்பட்ட போது, தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

15

# இனியாவது விலகுங்கள்!

## எதிர்க்கட்சி தலைவர்

கொழும்பு, ஜூலை 04

இந்த அரசாங்கத்தால் இனிமேலும் தொடர்ந்து நாட்டை முன் கொண்டு செல்ல முடியாது. எனவே, ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அரசாங்கம் உடனடியாக பதவி விலகுவதை தவிர வேறு மாற்று வழியில்லை என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இந்த கொடுங்கோல் அரசாங்கத்தை அகற்றுவதற்கான மக்கள் போராட்டத்தை ஆரம்பிப்பதாக

15

# முடங்கும் நிலையில் தனியார் பஸ் சேவை!

## 1000இற்கும் குறைவான பஸ்களே இயங்கும்

கொழும்பு, ஜூலை 04

நாடு முழுவதும் நேற்றைய தினம் 1,000 தனியார் பஸ்களே சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. இந்நிலையில், இன்று திங்கட்கிழமை முதல், ஆயிரத்துக்கும் குறைவான பஸ்களே நாடளாவிய ரீதியில் சேவையில் ஈடுபடும் என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

மக்கள் தமது வாகனத்தை விட்டுவிட்டு பஸ் போக்குவரத்

15

# சகல பாடசாலைகளுக்கும் இந்த வாரமும் விடுமுறை!

இணைய வழி கற்றலுக்கு ஏற்பாடு

07

# பெரமுன தலைமையில் அரசு; நாமலின் யோசனை நிராகரிப்பு!

## 9 கட்சிகள் கூட்டாக தீர்மானம்!

கொழும்பு, ஜூலை 04

தற்போதைய அரசாங்கத்தை கவிழ்த்து - பொதுஜன பெரமுனவின் புதிய அரசாங்கத்தை உருவாக்க வேண்டும் என நாமல் ராஜபக்ஷ முன்வைத்த யோசனையை ஒன்பது கூட்டுக்கட்சிகள் நிராகரித்துள்ளன.

வாசுதேவ நாணயக்காரவை தனியாக சந்தித்த நாமல் ராஜபக்ஷ பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை அமைக்கவேண்டும் எனத் தெரிவித்திருந்தார் என்று தகவல்கள் வெளியாகின.

இதை தொடர்ந்து, கடந்த செவ்வாய்க்கிழமை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஒன்பது கூட்டுக் கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்தின்போது,

15

# எரிபொருள் நெருக்கடிகளால் தூதரகங்கள் மூடப்படுகின்றன!

07

# அரசுக்கு எதிராக கண்டியில் மக்கள் சக்தி போராட்டம்!

கண்டி, ஜூலை 04

கண்டி, நாவலப்பிட்டி நகரில் அரசுக்கு எதிராக நேற்று ஞாயிற்றுக் கிழமை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப் பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுபாடு மற்றும் விலையேற்றத்துக்கும் நிரந்தர தீர்வு கோரி இதன்போது கோஷங்கள் எழுப்பப்பட்டன.

ஐக்கிய மக்கள் சக்தியினரின் ஏற்பாட் டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக் கப்பட்டது. இதில் பல தரப்பினரும் கலந்துகொண்டனர். (ஐ)



# பொதியை தொலைத்தவருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு!

யாழ்ப்பாணம், ஜூலை 04

யாழ்ப்பாணம் - கொழும்பு போக்கு வரத்து சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து ஒன்றின் பொதிகள் சேவைகள் ஊடாக அனுப்பப்பட்ட பொதி ஒன்றை தொலைத்து விட்டு, யாழ்ப்பாணத்தில் பொதியை பெற இருந்தவரை தகாத வார்த்தைகளால் பேசி , மிரட்டியமை தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய் யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளுக் கான 6ஆயிரம் ரூபாய் பெறுமதியான உதிரிப்பாகம் ஒன்றை கொழும்பில் உள்ளவர்களுடன் தொடர்பு கொண்டு கொள்வனவு செய்து , அதனை யாழ்ப் பாணம் - கொழும்புக்கு இடையில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து பொதிகள் சேவைகள் ஊடாக யாழ்ப் பாணத்துக்கு 600 ரூபாய் கட்டணம் செலுத்தி அனுப்பி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் குறித்த பொதியை பெற சென்ற போது , பொதி தொலைந்து விட்டது என பொறுப்பற்ற விதத்தில் பதில் அளித்ததுடன், பொதியை தொலைத்தமையால் பொதியில் இருந்த பொருளின் விலையை தருமாறு கேட்ட போது தகாத வார்த்தைகளால் பேசி அநாகரிகமான முறையில் பேருந்து சேவையினர் நடந்து கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இதேவேளை, தாம் இவர்களின் பொதிகள் சேவைகளை நம்பி கட்டணம் செலுத்தி பொதிகளை அனுப்பும்போது பொறுப்பற்ற விதமாக அவற்றைத் தவற விட்டு விட்டு, எந்தவிதமான பொறுப் பும் அற்ற வகையில் தம்மை தகாத வார்த்தைகளால் பேசியமையால் தான் மிகுந்த மனவுளைச்சலுக்கு உள்ளாகி உள்ளோம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் காரணமாக சகல விதத்தாலும் நாம் நசுக்கப்பட் டுக்கொண்டு இருக்கிறோம் என கவலை தெரிவித்தார். (ஐ)

# எரிவாயு, உரம், எரிபொருள், கடன் கேட்டு ரஷ்யா பறக்கின்றது குழு!

கொழும்பு, ஜூலை 04

இலங்கை எதிர்கொள்ளும் பொருளா தார நெருக்கடியில் இருந்து மீள்வதற் காக ரஷ்யாவின் ஆதரவைப் பெற குழு ஒன்று எதிர்வரும் 9ஆம் திகதி அந்த நாட்டுக்கு செல்லவுள்ளது.

இந்தக் குழுவில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் கலாநிதி சமன் வீர சிங்க ஆகியோர் பங்கேற்பர். இவர்கள், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு ஜனாதிபதி எழுதிய விசேட கடிதத்துடன் செல்லவுள்ளனர்.

11 - 15ஆம் திகதி வரை அந்த நாட் டில் தங்கியிருக்கும் இந்தக் குழு, உயர் மட்ட அதிகாரிகளை சந்தித்துப் பேச்சு நடத்துவர். குறிப்பாக எரிபொருள், உரம், எரிவாயு, கடன்கள் மற்றும் மனிதாபி மான உதவிகளை பெறுவது தொடர்பாக கலந்துரையாடப்படும் என்றும் தெரிய வருகின்றது. ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் சமன் வீரசிங்க இந்தப் பய ணத்தை உறுதி செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பருத்தித்துறை கடல்பரப்பில் 12 இந்திய மீனவர்கள் கைது!

வடமராட்சி, ஜூலை 04

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீன வர்கள் 12 பேர் படகு ஒன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை கடற் பரப்பில் வைத்து நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு மயிலிட்டி மீன் பிடித் துறைமுகத்தில் தங்கவைக்கப்பட் டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட மீன வர்கள் இன்று திங்கட்கிழமை பருத்தித்



துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப் படவுள்ளனர். (ஐ)

## இனியாவது...

தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், இதற் காக கட்சி நிற பேதங்களை மறந்து முன் வரவேண்டும்.

இந்தத் தருணத்தில், நாட்டுக்கு எதி ராக ஒரு கும்பலையோ அல்லது தனி நபரையோ பாதுகாப்பதை விடுத்து நாட்டு மக்களை பாதுகாப்பதில் தங் களை அர்ப்பணிக்குமாறு பாதுகாப்பு தரப்பினரிடமும் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நாட்டில் தற்போது நிலவும் பிரச் னைகளை 5 நாட்களில் 5 மாதங்களில் உடனடியாக தீர்க்க முடியாது. இவ்வா றான பொய்களை நம்பி ஏமாற வேண் டாம். இந்நாட்டு மக்களை தொடர்ந்தும் யாரேனும் ஏமாற்றவோ அல்லது தவ றாக வழிநடத்தவோ முயற்சித்தால் அது துரதிர்ஷ்டவசமான நிலை என்றும் கூறி னார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத் தில் நேற்று நடைபெற்ற கூட்டமொன் றில் கலந்து கொண்டு கருத்துத் தெரி விக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நாட்டை மீண்டும் கட்டியெ ழுப்ப குறைந்தது ஐந்து வருடங்களாகும் எனத் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், இதற்கப்பால் இந்நாட்டை கட்டியெ ழுப்புவோம் எனக் கூறும் பேச்சு மாயையானது எனவும் தெரிவித்துள் ளார். (ஐ)

## எரிபொருளுக்கான...

இதேசமயம், 50 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல், 10 ஆயிரம் மெற்றிக் தொன் மண்ணெண்ணெயை வழங்கு வதற்கு மலேசிய அரசாங்கம் உடன்பட் டுள்ளது. இந்த எரிபொருள் இறக்கு மதியை எதிர்வரும் 10ஆம் திகதிக்குள் பெற பேச்சு நடக்கிறது. அத்துடன், இவற்றை இலங்கைக்கு வழங்க மலேசி யாவின் மூன்று நிறுவனங்களுடன் பேச்சு நடக்கிறது என்றும் அமைச்சர் தெரிவித் தார்.

மேலும், நாட்டுக்கு தேவையான கச்சா எண்ணெயை பெற பெற்றோனாஸ் என்ற மலேசிய நிறுவனத்துடனும், அர சாங்கத்துடனும் இலங்கை பேச்சு நடத்து கிறது. மலேசிய அரசாங்கம் சாதகமான பதில் அளித்துள்ளது என்றும் அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை பெற்றோலி யக் கூட்டுத்தாபனத்திடம், ஒட்டோ டீசல் - 12,774 மெற்றிக் தொன், சுப்பர் டீசல் - 233 மெற்றிக் தொன், பெற்றோல் - 1,414 மெற்றிக் தொன், சுப்பர் பெற் றோல் - 2,677 மெற்றிக் தொன், ஜெட் எரிபொருள் - 500 மெற்றிக் தொன், உலை எண்ணெய் - 2,900 மெற்றிக் தொன்னே கையிருப்பில் உள்ளன என் றும் அமைச்சர் கூறினார். (ஐ)

## பெரமுன...

நாமல் தெரிவித்த யோசனையை வாசு தேவ நாணயக்கார கட்சித் தலைவர் களுக்கு வெளிப்படுத்தினார்.

இந்தத் திட்டத்தை அனைத்து கட்சி தலைவர்களும் முழுமையாக நிராகரித் தன என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அங்கு இது தொடர்பில் கருத்து தெரி வித்த கூட்டுக் கட்சிகளின் தலைவர்கள், இந்த நெருக்கடிக்கு ராஜபக்ஷக்களே காரணம் என்பதால் அவர்களுடன் இணைந்து ஆட்சியமைக்க முடியாது எனத் தெரிவித்தனர்.

எனவே, நாமல் ராஜபக்ச எம்.பியுடன் எவ்வித கலந்துரையாடலும் நடத்துவ தில்லை என கூட்டுக் கட்சிகளின் தலை வர்கள் தீர்மானித்தனர் என்றும் கூறப் பட்டது. (ஐ)

## ஜனாதிபதி...

ஊடக நிறுவனங்களுக்கு எரிபொருளை வழங்காமல் பறிப்பதன் மூலம் அந்த வாய்ப்பையும் இல்லாமல் செய்வதாக வும் சந்திம வீரகொடி குற்றம் சுமத்தியுள் ளார். (ஐ)

## ரம்புட்டான்...

எனினும், சிறுவன் உயிரிழந்துவிட்டார் என்று அறிக்கையிடப்பட்டது.

வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ. ஜெபாலசிங்கம் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தார்.

சிறுவனின் சடலம் உடற்கூற்றுப் பரி சோதனைக்காக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நாட்டை...

மூலம் அத்தியாவசிய சேவைகள் மட்டும் இயங்குவதுடன் அவர்களுக்கு தேவை யான எரிபொருளையும் வழங்க முடியும் என்றும் அரசாங்கம் கருதுகிறது என்றும் கூறப்படுகின்றது.

எது எப்படி இருப்பினும், அடுத்தவா ரம் பாடசாலைகள் இயங்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது நாட்டை முடக்குவது குறித்த தீர்மானத்தை மேலும் வலுப்படுத்துகிறது என்றும் தெரி விக்கப்பட்டது. (ஐ)

## முடங்கும்...

துக்கு மாறியுள்ளனர். முச்சக்கர வண்டி தொழில் வீழ்ச்சியடைந்துள்ளது. இதே சமயம் நோயாளிகளும் மருத்துவ சிகிச்சை பெறுவதில் சிரமப்படுகின்றனர் என்றும் அவர் கூறினார்.

டீசல் கையிருப்பு தீர்ந்து வருவதால், இந்த நேரத்தில் பஸ்களை இயக்குவதற் குப் போதுமான அளவு டீசலை விநியோ கிக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனம் தவறிவிட்டது.

பொதுப் போக்குவரத்து சேவையை தொடர்ந்து கொண்டு செல்லும் நோக் கில் தனியார் பஸ்களுக்கு இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போக் களில் எரிபொருளை வழங்குமாறு அரசாங்கம் முன்னர் அறிவுறுத்தியது.

எனினும், இலங்கை போக்குவரத்து சபையின் சில பிரதேச டிப்போக்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரி பொருள் வழங்கப்படுவதோடு சில இடங் களில் எரிபொருள் வழங்க மறுக்கப்பட் டுள்ளதாகவும் அவர் கூறினார். (ஐ)

## இப்படியும் நடக்கிறது...!

எரிபொருள் கப்பல் எப்போது வரும் என்பது பற்றியே நாடு முழுவதும் பட்டிமன்றங்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

இருபத்திரெண்டாம் திகதிக்கு முன்னதாக எரிபொருள் கப்பல் வருவதற்கான சாத்தியம் எதுவும் இல்லை என்றே தெரிகின்றது என்பது குறித்து ஏற்கனவே இந்தப் பத்தியில் தெரிவித்திருந்தேன். ஆனால் ஜனாதிபதியோ, பத்து நாட்களில் இந்த எரிவாயு, எரிபொருள் பிரச்னைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கக்கூடியதாக இருக்கும் என்று நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார். இது, பிரதமரின் கருத்துக்கும் ஜனாதிபதியின் கருத்துக்குமிடையே ஒற்றுமையின்மையை காட்டுவதாக பலரும் சமூக வலைத்தளங்களில் கருத்துப் பகிர்ந்து வருகின்றனர்.

பிரதமர் சொல்வதும் சரிதான், ஜனாதிபதி சொல்வதும் சரிதான் என்கின்றன சிலரின் கருத்துக்கள். பத்து நாட்களில் முதலில் சில ஆயிரம் தொன் எரிவாயு வரவிருக்கின்றது. அதன்பின் மேலும் பத்து நாட்களின் பின்னர் நாற்பதாயிரம் மெட்ரிக் தொன் பெற்றோலுடன் ஒரு கப்பல் இந்தியாவிலிருந்து வரவிருக்கின்றது. பத்துநாட்களில் எரிவாயு நெருக்கடிக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கக்கூடியதாக இருக்கும் என்றும் அதன்பின்னர் பத்துநாட்களில் எரிபொருளுக்கு தீர்வு என்றும்தான் ஜனாதிபதி சொன்னாரோ தெரியவில்லை.

இவை என்னதான் வந்தாலும், நாடு அமைதியடையப் போவதில்லை.

நாட்டில் எரிபொருள் தாராளமாக கிடைக்கும்வரை, அந்த எரிபொருளுக்கான கியூக்களும் தொடரத்தான் போகின்றன.

இந்த நாட்டுக்கு குறைந்தது மூன்று மாதத்திற்கு தேவையான எரிபொருள் ஏற்கனவே பதுக்கிவைக்கப்பட்டிருப்பதாக சில புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. தாராள எரிபொருள் விநியோகம் சாத்தியமாகும்வரை இந்த பதுக்கலும் தொடரவே செய்யும். எனவே, கப்பல்கள் வந்தாலும் அவற்றைப் பதுக்கிவைப்பதற்காக கியூவில் நிற்பவர்கள் நிற்கவே செய்வார்கள்.

நிலைமை இப்படி இருக்கையில், இந்த நிலைமை எப்போது தீருவதற்கு வாய்ப்பிருக்கின்றது என்பதுதான் இன்று ஆட்சியிலுள்ளவர்கள் முதல் சம்பந்தப்பட்ட எவருக்குமே தெரியவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தை எந்தவித முடிவும் எட்டப்படாமல் முடிந்திருக்கின்றது. அமெரிக்காவிலிருந்து வந்த அதிகாரிகள் திரும்பிவிட்டனர். அவர்கள் கொழும்பு வரும்போது, அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தையை முடித்து, அதிகாரிகள் மட்ட உடன்படிக்கையில் கையெழுத்திடுவார்கள் என்று நம்பப்பட்டது. ஆனால், அது நடக்கவில்லை.

இலங்கைக்கு கடன் கொடுத்த அமெரிக்க நிறுவனம் ஒன்று கடனை திருப்பிச் செலுத்துவதில்லை என்று இலங்கை முடிவெடுத்ததற்கு எதிராக அமெரிக்க நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருப்பது தெரிந்ததுதான். அந்த வழக்கில் சர்வதேச நாணய நிதியமும் சம்பந்தப்பட்டிருப்பதும் பேச்சுக்கள் வெற்றியாக முடியாததற்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

இனி, அந்த வழக்கின் முடிவு வரை காத்திருக்கவேண்டியும் வரலாம். ஏற்கனவே கொடுத்த கடன்காரருக்கு அவர்களின் விருப்பமோ அல்லது அறிவிப்போ இல்லாமல் கடன்களை திருப்பிச் செலுத்துவதை நிறுத்திவைத்துவிட்டு, புதிதாக கடன் பெறலாம் என்று ஓடித்திரிவது பயன்தருமா என்பது தெரியவில்லை.

அண்மையில், தன்னைச் சந்தித்த அரசியல் அணி ஒன்றிடம், தமது பழைய கடன்களை திருப்பிச் செலுத்தாதவரை எப்படி புதிய கடன்களை தரமுடியும் என்று சீன தூதுவர் கேள்வி எழுப்பியதாக தெரிகின்றது.

ஏற்கனவே தரவேண்டிய ஏழு பில்லியன் டொலர்களையும் திருப்பி தந்தால் மேலும் சில பில்லியனை தர சீனா தயாராக இருக்கின்றதாம். அதாவது, பதினான்கு பில்லியன் டொலர்களை புதிய கடனாக தரலாம். அதில், பழைய ஏழு பில்லியனை எடுத்துக் கொண்டுதான் தருவோம் என்கின்றது சீனா.

ஆனால், பழைய கடன் எடுக்கப்பட்டபோது செய்து கொள்ளப்பட்ட நிபந்தனைகள் இப்போது வேறாக இருக்கும். முன்னைய கடனுக்கு வழங்கப்பட்ட வட்டி வீதத்திலேயே இப்போது தரப்போவதில்லை. புதிய கடனுக்கு வட்டி அதிகமாக இருக்கலாம். அப்படியெனில், குறைந்த வட்டியிலுள்ள கடனை அடைத்துவிட்டு, அதற்கும் சேர்த்து புதிய பழைய கடனையும்சேர்த்து அதிக வட்டியில் பெற வேண்டியிருக்கும். ஆக, முழு நாட்டையும் மீண்டும் சீனாவிடம் அடகு வைக்கின்ற பரிதாப நிலை.

இந்தியாவிலும் இப்போது எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக “ஹிந்து” நாளிதழ் எழுதியிருக்கின்றது. இந்தியாவால் இன்று இலங்கை இருக்கும் நெருக்கடி நிலையில் தொடர்ந்து உதவ முடியுமா என்பதும் கேள்வியை ஏற்படுத்துகின்றது.

இலங்கை இப்போது செய்யக் கூடியது என்ன என்பதில் யாருக்கும் ஒரு தெளிவு இருப்பதாக தெரியவில்லை.!

- ஊர்க்குருவி

# கோட்டா, ரணில் வீடு சென்றால் இலங்கை மீண்டெழ முடியும்!

## இராதகிருஷ்ணன் எம். பி. தெரிவிப்பு

ஹற்றன், ஜூலை 04

“பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் இலங்கை மீண்டெழ வேண்டுமெனில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலகி வீடு செல்ல வேண்டும்.” - இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

மலையக மக்கள் முன்னணி ஏற்பாடு செய்திருந்த அரச சார்பற்ற நிறுவனங்களுடனான கலந்துரையாடல் நேற்று ஹற்றன் கிருஷ்ணபவான் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட பின் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,



“இலங்கையின் பணவீக்கம் வரலாறு காணாத வகையில் உச்சம் தொட்டு 56 சதவீதமாகப் பதிவாகியுள்ளது. முறையற்ற விதத்திலான பண அச்சீடு உட்பட சிறீ லங்கா பொதுஜன முன்னணி அரசின் பிற்போக்குத்தனமான ஆட்சிக் கொள்கையே இதற்குப் பிரதான காரணம்.

ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி கண்டுள்ளது. ஒருவரின் வங்கி வைப்பில் 10 இலட்சம் ரூபாய் இருந்திருந்தால் தற்போது அதன் உண்மையான பெறுமதி 5 இலட்சம் ரூபாயாகவே இருக்கும். அந்தளவுக்குப் பொருட்களின் விலைகளும் எகிறியுள்ளன.

எனவே, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை நீங்க வேண்டுமெனில் ஜனாதிபதியும், பிரதமரும் பதவி விலகுவதே சிறந்த தேர்வாக இருக்கும். தற்போதைய ஆட்சியாளர்களை சர்வதேச சமூகம்கூட ஏற்கவில்லை. கட்டாரிலுள்ள முக்கிய நிறுவனமொன்றைத் தடைப் பட்டியலில் கோட்டா அரசு இணைத்தது. இதன் விளைவாகவே கட்டாரில் இருந்து எரிபொருளைப் பெறுவதில் அரசு திண்டாடுகின்றது. முறையற்ற - தெளிவற்ற - கொள்கையற்ற ஆட்சிப் போக்கே இதற்குக் காரணம்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்குச் சர்வதேச சமூகத்துடன் சிறந்த தொடர்பு உள்ளது. அரபு உலக நாடுகளுடனும் அவர் நட்புறவைப் பேணி வருகின்றபடியால் அவரால்தான் நாட்டை மீட்க முடியும்” - என்றார். (ஐ)

# இராணுவ முகாம்கள் ஊடாக மருத்துவர்களுக்கு எரிபொருள்!

கொழும்பு, ஜூலை 04

எரிபொருள் நெருக்கடி நிலை காரணமாக அருகில் உள்ள இராணுவ முகாம்களில் இருந்து மருத்துவர்களுக்கு எரிபொருள் விநியோகிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதியும் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து மருத்துவர்களுக்கு எரிபொருள் விநியோகிக்கும் போது ஏற்படும் அமைதியின்மையை கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அத்தியாவசிய உணவுப்பொருட்களை ஏற்றிச்செல்லும் லொறிகள், பொருளாதார நிலையங்களுக்கு மரக்கறிகள் மற்றும் பழங்களை ஏற்றிச்செல்லும் வாகனங்களுக்கும் இராணுவ முகாம்களில் இருந்து எரிபொருளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக செயலாளர் தெரிவித்தார்.

நுவரெலியா, கெப்பிட்டிபொல, தம்புளை, தம்புத்தேகம, மீகொட பொருளாதார மையங்களுக்கு அருகிலுள்ள இராணுவ முகாம்களிலிருந்து எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது.

இதனிடையே, இலங்கை போக்குவரத்து சபையின் சாலைகளுக்கும் தனியார் பஸ்கள், நோயாளர் காவு வண்டிகள் மற்றும் சுற்றுலா பேருந்துகளுக்கான எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# 291 லீற்றர் எரிபொருளுடன் அளவெட்டியில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 04

அளவெட்டியில் பதுக்கி வைக்கப்பட்ட 291 லீற்றர் டீசல் தெல்லிப்பழைப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

அந்தப் பகுதியில்அதிக விலைக்கு எரிபொருள் விற்பனை செய்யப்படுவதாக தெல்லிப்பழைப் பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து அந்த இடம் முற்றுகையிடப்பட்டது.

இதன்போது அங்கு விற்பனைக்கு தயாராக இருந்த சுமார் 70 லீற்றர் டீசலையும், ஏற்கனவே பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு பரல் டீசலையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். (ஐ)

# பேருந்தில் ஏற முயன்றவர் தடுக்கி விழுந்து மரணம்!

நுவரெலியா, ஜூலை 04

பேருந்தில் ஏற முற்பட்ட முதியவர் தடுக்கி விழுந்து உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நுவரெலியா - புசல்லாவை பேருந்து நிலையத்தில் இடம்பெற்றது.

குறித்த நபர் சுகவீனமுற்று இருந்த நிலையில், தனியார் மருத்துவமனையில் மருந்து பெற்றுவிட்டு வீடு திரும்புவதற்காக பேருந்தில் ஏற முற்பட்டபோதே விழுந்து உயிரிழந்தார்.

புசல்லாவை - ஹெல்பொட தோட்ட பகுதியைச் சேர்ந்த 75 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். (ஐ)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜூலை 04

உலகெங்கும் வாழும் மக்கள் நெருக்கடிகளிலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமான வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இறை ஆசி வேண்டி பிரார்த்தனை நடைபெறுகிறது.

இந்தப் பிரார்த்தனை வரிசையில் நாளை செவ்வாய்க் கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் அச்சுவேலி - பத்தமேனி சீத்தாங்குளம் பிள்ளையார் கோவிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ பா. மனோகரக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில் நேரடியாக ஒலிபரப்பாகும். (ஐ)

ஈழநாடு
Eelanadu
04.07.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஆனி 20

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

# திறமையற்றவர்களின் அதிகாரம்?

1977இல், அதிகாரத்தைக் கைப்பற்றிய ஜே. ஆர். ஜெயவர்த்தன - தன்னை நோக்கி அதிகாரங்களை குவிக்கும் நோக்கிலேயே புதிய அரசமைப்பைக் கொண்டுவந்தார். அவரின் வார்த்தையில் கூறுவதனால் - "ஆணை பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுவதை தவிர, அனைத்தையும் செய்யும் வல்லமை கொண்ட அரசமைப்பு". ஆனால், அவ்வாறான அரசமைப்பின் மூலம் நாட்டின் பிரச்னைகள் எதனையும் தீர்க்க முடியவில்லை.

காலத்துக்குக் காலம், ஆட்சிக் கதிரையை கைப்பற்றும் சிங்கள அரசியல்வாதிகள், தங்களின் விருப்பங்களுக்கு ஏற்ப அரசமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தனர். இந்த நிலைமை ராஜபக்ஷக்களின் காலத்தில் உச்சமடைந்தது. ராஜபக்ஷக்களுக்கு முன்னர் இருந்த சிங்கள அரசியல்வாதிகளும் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில்தான் அனைத்தையும் செய்தனர். ஆனால், ராஜபக்ஷக்கள் அளவுக்கு எவரும் தங்களின் குடும்பங்களை நோக்கி அதிகாரத்தைக் குவிக்கவில்லை. 2010இல் மீளவும் வெற்றிபெற்ற மகிந்த ராஜபக்ஷ, தனது குடும்பத்தை நோக்கி எல்லையற்ற அதிகாரத்தை குவிக்கும் நோக்கிலேயே, 18ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டுவந்தார்.

மக்களின் நலன்களை விடவும் தங்கள் குடும்பத்தின் நலன்களே பிரதானமானது என்னும் அடிப்படையிலேயே, ராஜபக்ஷக்கள் ஒவ்வொரு விடயங்களையும் முன்னெடுத்திருந்தனர். விடுதலைப் புலிகள் அமைப்பின் தோல்வியை தொடர்ந்து, சிங்களவர்கள் மத்தியில் கதாநாயகர்களாக கொண்டாடப்பட்ட ராஜபக்ஷக்கள் கொஞ்சம் கொஞ்சமாக நாட்டை சீரழிப்பதை சிங்கள - பௌத்த தேசியவாத சக்திகள் விளங்கிக்கொள்ளவேயில்லை. ஒரு சிறிதளவுகூட ராஜபக்ஷக்கள் மீது அவர்களுக்கு சந்தேகம் ஏற்படவில்லை. அந்தளவுக்கு ஏனைய இனங்கள் மீதான வெறுப்பே அவர்களை வழிநடத்தியிருந்தது. அந்த வெறுப்பை, நன்கு திட்டமிட்டு நிறுவனமயப்படுத்துவதில் ராஜபக்ஷக்கள் வெற்றிபெற்றனர். சிங்களவர்களின் பலவீனத்தை தங்களின் நலன்களுக்கு கச்சிதமாக பயன்படுத்திக் கொண்டனர்.

ராஜபக்ஷக்களின் எல்லையற்ற அதிகாரமே நாட்டை இந்த நிலைக்கு கொண்டு வந்திருக்கின்றது. ராஜபக்ஷக்களின் அராஜக அரசியலானது, மறுபுறமாக, அதிகாரம் தொடர்பான கேள்விகளை முன்வைக்கின்றது. அதிகாரம் தேவை. ஆனால், அதனை யாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்னும் விழிப்புணர்வு மக்களிடம் இல்லாமல் போகும்போது, அதனால் அந்த மக்கள் எவ்வாறான தீமைகளை அனுபவிப்பார்கள் என்பதற்கு ராஜபக்ஷக்களின் ஆட்சி ஒரு சிறந்த உதாரணமாகும். ஒரு நாட்டை முன கொண்டு செல்வதற்கு அதிகாரம் தேவைதான். ஆனால், அந்த அதிகாரம் யாரிடம் இருக்கின்றதென்பதைப் பொறுத்தே, அந்த அதிகாரத்துக்குப் பெறுமதி உருவாகும். திறமையற்றவர்கள், ஊழல் பேர்வழிகள், எதிர்காலம் தொடர்பில் சிந்தனையற்றவர்கள் - இப்படியானவர்களின் கைகளில் அதிகாரம் குவிந்தால், நாடு நாசமடையும். இது சிங்களவர்களுக்கு மட்டுமல்ல நமக்கும் பொருந்தும்.

தேர்தல் காலத்தில் உச்சரிக்கப்படும் நடைமுறை சாத்தியமற்ற கோஷங்களை நம்பி, தங்களின் அரசியல் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் தமிழர்களுக்கும் இறுதியில் ஏமாற்றமே மிஞ்சும். யுத்தத்துக்கு பின்னரான கடந்த பதின்மூன்றாண்டுகளில், தமிழர் வாழ்வில் எந்தவொரு நம்பிக்கையான விடயங்களும் இடம்பெறவில்லை. வெறுமனே சிலர் பாராளுமன்றம் சென்றதைத் தவிர, வேறு எதுவும் நடைபெறவில்லை. அதற்காக தமிழ் மக்களின் நியாயமான அரசியல் நிலைப்பாடுகளை கைவிட்டு, சராணாகதியடைய வேண்டுமென்பதல்ல.

மாறாக, தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாடுகளுக்காக குரல் கொடுக்கும் அதேவேளையில், தமிழ் மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்கள் தொடர்பிலும் தமிழ்த் தேசியர்கள் சிந்திக்க வேண்டும். அதேவேளை வாய்ப்புக்கள் கிடைக்கின்ற போது, அதனை உச்சளவில் பயன்படுத்தும் உபாயங்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். எந்நேரமும் கோஷங்களை முன்வைத்துக் கொண்டிருப்பது மட்டும் அரசியலல்ல. தற்போதுள்ள அரசமைப்பில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென்று வாதிடும் அதேவேளை, அதற்காக குரலெழுப்பிக் கொண்டிருக்கும் போதே, மறுபுறம், இருக்கின்ற விடயங்ளை உச்சளவில் பயன்படுத்தும் வல்லமை தொடர்பில் சிந்திக்க வேண்டும். இவ்வாறான ஆற்றலுள்ளவர்களே தமிழ்த் தேசிய அரசியல் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் தமிழ் மக்களுக்கு சுலோகங்கள் மட்டுமே மிஞ்சும்.

# "பஞ்ச பூதங்களிலும்" தாக்கத்தை ஏற்படுத்தும் பொருளாதார பாதிப்பு!

**அலசுவது இராஜதந்திரி**

*இலங்கையில் நிவுகின்ற பொருளாதார நெருக்கடி நிலம், நீர், ஆகாயம், காற்று , நெருப்பு ஆகிய பஞ்ச பூதங்களிலும் தாக்கத்தை செலுத்துவதையே அவதானிக்க முடிகின்றது.*

*நிலத்தை எடுத்துக்கொண்டால் இலங்கையின் விவசாயிகள் என்றுமில்லாதவாறு தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது பரிதவித்து நிற்கின்றனர். தமது கமத்தொழிலுக்கு வேண்டிய இயந்திரங்களை இயக்குவதற்குத் தேவையான எரிபொருளை கொள்வனவு செய்ய முடியாது சங்கடத்துக்கு உள்ளாகியுள்ளனர்.*

*விளை நிலங்களுக்கு நீர் இறைக்கவோ அல்லது நிலத்தை பண்படுத்துவதற்குரிய எரிபொருள் இன்றி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் சேதன உரப் பாவனை சம்பந்தப்பட்ட சர்ச்சை விவசாயிகளை மேலும் பாதித்துவிட்டுள்ளது.*

*தரையில் விவசாயிகளுக்கு மட்டுமல்ல. மீனவர்களுக்கும் கடலில் மீன் பிடிக்க முடியாத நிலைமை மோசமடைந்து வரு கின்றது. டீசல் பெற முடியாது மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எரிபொருள் விற்பனை நிலையங்களில் பார ஊர்திகளுக்கு மட்டுமல்ல. மீன்பிடி படகுகளுக்கு டீசல் பெறவும் மீனவர் சமூகத்தினர் ஏனைய வாகன சாரதிகள் ஆகியோர் எரிபொருள் நிலைய உரிமையாளர்களுடன் முரண்படுவதையும் காணமுடிகின்றது.*

*எரிபொருள் நிலையங்களில் ஏற்படுகின்ற முரண்பாடுகள் அடிதடி மோதல்களாக மாற்றம் பெறுகின்ற நிலமைகளும் நாளுக்கு நாள் வலுவடைந்து வருகின்றன.*

*தற்போதைய நிலமையில் நாட்டில் எரிபொருள் பிரச்னை முழு நாட்டையுமே எரித்து விடும் பிரச்னையாக மாற்றமடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவ்வளவு தூரம் மக்கள் மிகவும் விரக்தியுற்ற நிலையில் இருக்கின்றனர். உணவின்றி தற்கொலை மரணங்கள் நாளுக்குநாள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம் பெற்று வருகின்றன.*

*அரசியல்வாதி ஒருவரின் வீட்டுக்கு வெளியே காவலுக்கு நின்ற பொலிஸ் விசேட அதிரடிப் படையைச்சேர்ந்த உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரும் மன உளைச்சல் காரணமாக தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.*

*இது போன்ற சம்பவங்கள் அதிகரித்து வருவதன் காரணமாக நாட்டு மக்கள் சாத்வீக வழியிலின்றி வன்முறையாக தமது ஆத்திரத்தை வெளிப்படுத்தலாமென்ற அபிப்பிராயமே தற்போது பரவலாக நிலவி வருகின்றது.*

*தென்னிலங்கையில் பௌத்த மத பண்டிகைகளின்போது அலங்காரங்கள் வீதிகளில் செய்யப்படுவது வழக்கமாகும். தற்போது அலங்காரங்களுக்கு பதிலாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ , அவரின் சகோதரரான முன்னள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோரின் கொடும்பாவிகளே நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சந்திகளில் மரண தண்டனை வழங்கப்பட்டது போல தொங்கப்போடப்பட்டு வருகின்றன. ஆர்ப்பாட்டங்களும் நாடளாவிய ரீதியில் அதிகரித்து வருகின்றன.*

*வெளிநாடுகளிலிருந்து உல்லாசப் பயணிகள் வருகை வெகுவாகக் குறைவடைய ஆரம்பித்துள்ளது. ஏனெனில், பல உல்லாசப் பயண ஹோட்டல்கள், விடுதிகள் வேலையாட்களின் பற்றாக்குறை காரணமாக மூடப்பட்டு வருகின்றன. வேலையாட்களை எடுத்துக்கொள்ளும் பட்சத்தில் அவர்களால் தினந்தோறும் கடமைக்கு வரமுடியாத நிலை காணப்படுகின்றது. தூர இடங்களிலிருந்து பஸ் வண்டிகளும் முன்பு போல அடிக்கடி போக்குவரத்தில் ஈடுபட முடியாதிருக்கின்றது. புகையிரத வண்டிகள்கூட நிரம்பி வழிகின்றன. இதன்காரணமாக வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் இலங்கை வருவது அருகியுள்ளது. அத்துடன், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையமும் மூடப்படும் நிலை ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது. இதற்கு ஒரு காரணம் பயணிகளின் வருகையில் தளர்வு, மற்றையது எரிபொருள் பற்றாக் குறையாகும்.*


*நாட்டிலுள்ள அனைத்து அரச பாடசாலைகளும் ஜூலை நான்காம் திகதி முதல் எட்டாம் திகதி வரை மூடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வாகனப் போக்குவரத்துகளை மேற்கொள்ள முடியாத காணத்தாலேயே அரச பாடசாலைகள் மூடப்படும் நிலைக்கு தள்ளப்படுகின்றன.*

*இதன் மூலம் மாணவ சமூகத்தின் கல்வி பெரிதும் பாதிக்கப்படும் சூழ்நிலைகளே தோற்றம் பெற்றுள்ளன.*

*பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துக்கான வாகனங்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. ஆனால், எரிபொருள் நிலையங்களைப் பாதுகாக்க தற்போது கனரக கவச வாகனங்களும் களமிறக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு எரிபொருள் அதிகளவில் தேவைப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டின் சில இடங்களில் கவச வாகனங்கள் எரிபொருள் நிலையங்களுக்கு முன்பாகத் தரித்து நிற்பதை பார்க்கும்போது நாட்டில் ஒரு போர்க் காலச்சூழல் நிலவுவது போன்ற பிரமையே ஏற்படுகின்றது.*

*ஒருவகையில் குறிப்பிடுவதாயின் நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கையே தற்போது ஒரு போராட்டமாக மாறியுள்ள நிலையில் இன்றைய பொருளாதார நெருக்கடியையும் ஒரு போராட்டச் சூழல் என்று குறிப்பிடுவதில் தவறில்லை என்றே கருதலாம்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
செயல்களை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டுவீர்கள். முயற்சிகள் வெற்றியாகும். நிறைவேறாமல் இருந்த உங்களது முயற்சிகள் இன்று நிறைவேறும்.

**இடபம்**
நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். சூழ்நிலைகள் உங்கள் முயற்சிக்கு சாதகமாகும். உற்சாகத்துடன் செயல்பட்டு எதிர்பார்த்தவற்றில் மகிழ்ச்சியான நிலையை அடைவீர்கள்.

**மிதுனம்**
துணிச்சலுடன் செயல்படுவீர். மாற்று மதத்தினரின் உதவி உங்களை மகிழ வைக்கும். வேலை விஷயமாக வெளிநாடு செல்வதற்கான முயற்சியில் ஈடுபடுவீர்கள். உங்களது எண்ணம் நிறைவேறும்.

**கடகம்**
குடும்பத்தினரின் மகிழ்ச்சிக்காக இன்றைய நாளை ஒதுக்குவீர்கள். குடும்பத்தினரால் உங்களது செயல் வெற்றியாகும். நீண்ட நாளாக வராமல் இருந்த பணம், இன்று உங்களிடம் வந்து சேரும்.

**சிம்மம்**
குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் தீரும். நன்மையான நாள். குடும்பத்தினருக்காக செலவுகள் அதிகரித்தாலும், அதற்கேற்ப வருவாய் வந்து சேரும். செயல்களில் தடுமாற்றத்தை சந்திப்பீர்கள்.

**கன்னி**
உங்களுக்கு வசதியாக வீட்டை மாற்றி அமைக்க முயற்சிப்பீர்கள். அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக செலவு செய்வீர்கள். முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**துலாம்**
உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். எதிர்பார்த்த செய்தி காலையிலேயே வந்து சேரும். வெளியூர் பயணம் யோகம் தரும். நெருக்கடிகள் விலகும்.

**விருட்சிகம்**
போட்டிகளை சமாளித்து வியாபாரத்தை விரிவு செய்வீர்கள். வருவாய் அதிகரிக்கும். உங்களை ஏளனம் செய்தவர்கள் ஆச்சரியப்படும் வகையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு**
மனம் மகிழும்படியான நிலை ஏற்படும். அலைச்சல் அதிகரித்தாலும் உங்கள் விருப்பம் நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தினரை மகிழ்ச்சி படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**மகரம்**
கோயில் வழிபாட்டால் மகிழ்வீர்கள். குடும்பத்தினர் உங்களுக்கு ஆதரவாக இருப்பர். உங்களது பிரச்னைகளை மற்றவர்களிடம் கொண்டு செல்ல வேண்டாம். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை.

**கும்பம்**
குடும்பத்தில் ஏற்பட்ட சங்கடங்கள் விலகும். மகிழ்ச்சியான சூழல் உண்டாகும். புதிய நட்பினால் உங்கள் வாழ்வில் திருப்புமுனை உண்டாகும். நினைத்ததை சாதிப்பீர்கள். நினைத்தவை வெற்றியாகும்.

**மீனம்**
சுப நிகழ்ச்சி ஒன்றை நடத்த திட்டமிடுவீர்கள். திருமண வயதினருக்கு வரன் தேடி வரும். வீட்டிற்குள் நீங்கள் எதிர்பார்த்த மகிழ்ச்சியை அடைவீர்கள். நன்மையான நாள். உறவினர்களுடன் திடீர் பயணம் உண்டாகும்.

# ஓராண்டு ஆட்சியில் செய்த சாதனைகளால் மனநிறைவு

## முதலமைச்சர் மு. க. ஸ்டாலின்



சென்னை, ஜூலை 04

தமிழகத்தில் ஓராண்டு காலத்தில் செய்திருக்கும் சாதனைகளைப் பார்க்கும்போது மன நிறைவை தருகிறது என முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்தார்.

கரூர் திருமாநிலையூரில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பேசிய போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழகத்தில் இந்த ஓராண்டு காலத்தில் கரூர் மாவட்டத்தில் செய்திருக்கும் சாதனைகள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழக மக்களுக்கு செய்திருக்கக்கூடிய சாதனைகளைப் பார்க்கும் போது மனநிறைவை தருகிறது. மக்கள் மனங்களிலும் இதுதான் இருக்கிறது என்பது அவர்களின் முகங்களைப் பார்க்கும்போது தெரிகிறது.

வீண் விமர்சனங்களுக்கு பதில் சொல்லி என்னுடைய நேரத்தை வீணடிப்பதில்லை. மானத்தைப் பற்றி கவலைப்படுபவர்களுடன் போராடலாம். மானத்தைப் பற்றி கவலைப்படாதவர்களிடம் போராட முடியாது. ஆட்சியை பற்றி வீண் விமர்சனம் செய்பவர்களிடம் கேட்காமல், அரசால் பயனடைந்த பயனாளிகளிடம் கேளுங்கள்.

கோடிக்கணக்கான தமிழ் மக்களின் வீடுகளில் விளக்காக, அவர்கள் விளக்கேற்ற காரணமாக இருக்க வேண்டும் என நினைக்கிறேன். மக்கள் எனக்கு முதல்வர் பொறுப்பை வழங்கி உள்ளனர். அந்த நம்பிக்கையைக் காப்பாற்றுவேன். மக்களின் நியாயமான கோரிக்கைகளை செயல்படுத்தி வருகிறோம். நான் நினைப்பது மட்டும்தான் நடக்கவேண்டும் என நினைப்பவன் நானல்ல - என்றும் முதல்வர் கூறினார். (ஐ)

# பன்னீர்செல்வத்தை கட்சியைவிட்டு விலக்குவதற்கு பழனிசாமி திட்டம்!



சென்னை, ஜூலை 04

ஒற்றைத் தலைமைக்கு தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வருவதால் ஓ. பன்னீர்செல்வத்தை 11ஆம் திகதி நடைபெறும் அ. தி. மு. க பொதுக்குழுக் கூட்டத்தில் கட்சியை விட்டு நீக்க எடப்பாடி பழனிசாமி தரப்பு திட்டமிட்டுள்ளது என்று தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

அ. தி. மு. கவில் கடந்த 14ஆம் திகதி முதல் ஒற்றைத் தலைமை விவகாரம் அனல் பறந்து வருகிறது. கடந்த மாதம் 23ஆம் திகதி நடைபெற்ற பொதுக்குழுவில் ஒற்றைத் தலைமை சர்ச்சை முடிவுக்கு வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், நீதிமன்றத்துக்கு பன்னீர்செல்வம் சென்றார். நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு காரணமாக ஒற்றைத் தலைமை சர்ச்சை நீடித்து வருகிறது.

23ஆம் திகதி நடைபெற்ற அ. தி. மு. க. பொதுக்குழுவில், ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட 23 தீர்மானங்களைத் தவிர வேறு எந்த தீர்மானத்தையும் நிறைவேற்றக்கூடாது என்று நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், அந்த கூட்டத்தில் 23 தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்டன. அதேநேரம், கட்சி அவைத் தலைவராக தமிழ்மகன் உசேனை தேர்ந்தெடுக்கும் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, அவைத் தலைவராக அவர் பொறுப்பேற்றுக் கொண்டார். அதன் பிறகு, ஜூலை 11ஆம் திகதி மீண்டும் பொதுக்குழு நடைபெறும் என்று தமிழ்மகன் உசேன் அறிவித்தார்.

இந்நிலையில், தமிழ்மகன் உசேனை அவைத் தலைவராக நியமித்தது செல்லாது என நீதிமன்ற அவமதிப்பு வழக்கை சென்னை உயர் நீதிமன்றத்தில் பன்னீர்செல்வம் தொடர்ந்துள்ளார். சென்னை உயர் நீதிமன்றம் ஏற்கனவே பிறப்பித்த உத்தரவுக்கு தடை விதிக்கக் கோரி, உச்ச நீதிமன்றத்தில் பழனிசாமி தரப்பு மனு தாக்கல் செய்துள்ள நிலையில், அதற்கு முன்னதாகவே, அ. தி. மு. க. பொதுக்குழு தொடர்பான வழக்கில் தன்னை கேட்காமல் எந்த உத்தரவையும் பிறப்பிக்கக் கூடாது என கேவியட் மனுவை பன்னீர்செல்வம் தாக்கல் செய்துள்ளார்.

இவ்வாறு தொடர்ந்து, அ. தி. மு. கவுக்குள் ஒற்றைத் தலைமை ஏற்படுவதற்கும், அந்த ஒற்றைத் தலைமையை பழனிசாமி கைப்பற்றாமல் இருப்பதற்கான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் பன்னீர்செல்வம் மேற் கொண்டு, வருகிறார். இந் நிலையில், தி. மு. க. கட்சி யின் 50ஆண்டு அரசியல் வாழ்வை பாராட்டும் விதமாக அவருக்கு பன்னீர் செல்வம் தெரிவித்த வாழ்த்தில், கருணாநிதியை புகழ்ந்துள்ளார். இது கட்சி விதியை மீறியது என்பதால் அவரைக் கட்சியை விட்டு நீக்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது - என்று தமிழக ஊடகங்கள் தெரிவித்தன. (ஐ)

# தமிழகத்தில் தஞ்சம் கோரிய வயோதிபப் பெண் மரணம்!

மதுரை, ஜூலை 04

இலங்கையிலிருந்து தஞ்சம் கோரிச் சென்று கடற்கரையில் மயங்கிய நிலையில் மீட்கப்பட்ட வயோதிப தம்பதியரில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். சி. பரமேஸ்வரி என்பவரே நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார் என்று தெரிய வருகின்றது.

இவர்கள் கடந்த 27ஆம் திகதி அதிகாலை தனுஷ்கோடி கடற்கரையில் மயங்கிய நிலையில் மீட்கப்பட்டனர். இவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், வயோதிப தாய் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மன்னார் முருங்கன்பிட்டியை சேர்ந்த பரமேஸ்வரி மற்றும் சிவன் ஆகிய வயோதிப தம்பதிகள் கடந்த 25ஆம் திகதியளவில் தனுஷ்கோடியை சென்றடைந்தனர். கடற்கரையில் உணவு, தண்ணீரின்றி கடல்நீரை குடித்த இருவரும், சோர்வால் மயங்கிய நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டனர்.

இருவரும், இராமநாதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையில் உள்ள இருவரை மாவட்ட ஆட்சித் தலைவர் ஜான் டாம் வர்கீஸ் நேரில் சென்று பார்வையிட்டர். மேலும் இருவரின் உடல் நிலை மிக மோசமாக இருப்பதால் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு மாற்று மாறு பரிந்துரை செய்து அனுப்பி வைத்தார்.

இந்த நிலையில் மதுரை அரசு ராஜாஜி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த குறித்த வயோதிப தம்பதியரில் பரமேஸ்வரி என்ற வயோதிப தாய் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ஐ)

# இனி ஒருபோதும் ராஜபக்ஷர்கள் ஆட்சிக்கு வரவே மாட்டார்கள்!

## திஸ்ஸ விதாரண எம். பி.

கொழும்பு, ஜூலை 04

முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தலைமையில் புதிய அரசியல் கூட்டணியை ஸ்தாபிக்க பாராளுமன்றில் சுயாதீனமாக செயல்படும் உறுப்பினர்கள் அவதானம் செலுத்தியுள்ளார்கள். நாட்டு மக்கள் இனியொரு போதும் ராஜபக்ஷர்கள் தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவிக்கமாட்டார்கள் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், சமூகக் கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள எந்தப் பிரச்னைக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தீர்வு பெற்றுக்கொடுக்கவில்லை. கடந்த காலங்களை காட்டிலும் தற்போது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள். எரிபொருள் பற்றாக்குறை முழு நாட்டையும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

அரசியல் ஸ்திரமற்ற தன்மைக்கு இதுவரை தீர்வு எட்டப்படவில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணாமல் பொருளாதார நெருக்கடிக்கு ஒருபோதும்



தீர்வு காண முடியாது என்பதை சகல அரசியல் தரப்பினரும் விளங்கிக்கொள்ள வேண்டும். சர்வகட்சிகளையும் ஒன்றிணைத்து இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபித்து பொதுத் தேர்தலுக்கு செல்வது சிறந்த தீர்வு காண வேண்டும் என்பதை மகா நாயக்க தேரர்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள்.

சர்வகட்சி தலைமையிலான அரசாங்கத்தை ஸ்தாபிப்பதில் ஜனாதிபதி அவதானம் செலுத்தவில்லை. அரசியல் சூழலை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு பதவி காலத்தை நிறைவு செய்யும் முயற்சியை மாத்திரம் ஜனாதிபதி முன்னெடுக்கிறார். நாட்டு மக்கள் எதிர்க்கொண்டுள்ள அடிப்படை பிரச்னைக்கு தீர்வு காண ஜனாதிபதி அக்கறை செலுத்தவில்லை.

சர்வகட்சி தலைமையிலான அரசாங் கத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்பதே சகல தரப்பினரின் அபிப்பிராயமாக உள்ளது. முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தலைமையில் புதிய கூட்டணியை ஸ்தாபிக்க பாராளுமன்றில் சுயாதீனமாக செயல்படும் தரப்பினர் அவதானம் செலுத்தியுள்ளார்கள் - என்றார். (ஐ)

# டோக்கன் முறைமை நடைமுறை இல்லை!

## மக்கள் ஏமாறவேண்டாம் என்கிறார் அமைச்சர்!

**கொழும்பு, ஜூலை 04**

**எரிபொருள் வழங்குவதற்கான டோக்கன் முறைமை தற்போது நடைமுறையில் இல்லை. இது இருப்பதாகக் காட்டி மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள் எனவே மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.**

எரிபொருள் வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட டோக்கன் முறையானது ஜூன் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் மாத்திரமே நடைமுறையில் இருந்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் மக்கள் எரிபொருள் இல்லாமல் தங்குவதைத் தடுப்பதற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும், தற்போது இந்த டோக்கன் முறைமை, ஐ. ஓ. சி. எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் வியாபாரமாக மாறியுள்ளது. எனவே, இது விடயத்தில் மக்கள் விழிப்பாக



இருக்க வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)

# நாட்டின் பல பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை!

கொழும்பு, ஜூலை 04

கிங் கங்கையின் நீர்மட்டம் உயரக்கூடும் என்பதால் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள மக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு நீர்ப்பாசன திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

வெலிவிட்டி, திவித்துர, பத்தேகம, கொட்டபொல, ஹிக்கடுவை, நியாகம, நெலுவ, தவலம, அக்மீமன, நாகொடை, எல்பிட்டி, போபே பொத்தல மற்றும் காலி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உட்பட்ட தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் என பிரதேசவாசிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மத்திய மலையகத்தின் நீர்பிடிப்பு பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு பெய்த கடும் மழை காரணமாக கெனியன் நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் தலா மூன்று அடிக்கு திறக்கப்பட்டுள்ளன.

மேலும், ஹற்றன் - கொட்டகலையில் உள்ள சமதானபுரத்தில் டெவோன் நீர்வீழ்ச்சியில் இருந்து அப்பகுதியில் உள்ள வாய்க்காலொன்றுக்கு பாயும் நீர், நிரம்பி வழிவதால் பல வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின.

இதேவேளை, வட்டவளை ரொசல்ல -ஹைட்ரி பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால், விவ சாய நிலங்கள் மற்றும் தோட்ட தொழிலாளர்களின் குடியிருப்புகளும் பாதிக்கப்பட்டுள்ளன. 60இற்கும் மேற்பட்டோர் வீடுகளில் இருந்து வெளியேறி மதஸ்தலம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# கோட்டாபயவுக்கு மூளை சரியில்லை!

## ரஞ்சித் எம். பி. சாடல்

கொழும்பு, ஜூலை 04

“மக்கள் இன்று வீடுகளிலேயே செத்து மடிகிறார்கள். இன்னும் இரண்டு வருடங்கள் உள்ளன, பல்லாயிரக்கணக்கான மக்கள் உணவு இல்லாமல் வரிசையில் இறப்பார்களோ தெரியாது. பொறுப்பற்று எதேச்சதிகாரமாக செயல்பட்ட வண்ணமுள்ளார் ஜனாதிபதி. கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மூளை சரியில்லை“ என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் தற்போது 22ஆவது அரசமைப்பு திருத்தத்தை சமர்ப்பித்துள்ளது. 21ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட சர்வாதிகார ஆட்சியை அகற்றிவிட்டு 19ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டு வருமாறு இந்நாட்டு மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நாட்டு மக்கள் போராடிக் கொண்டிருக்கும்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மே 11 ஆம் திகதி நாட்டு மக்களுக்கு உரையாற்றி 19ஆம் திருத்தம் மீண்டும் கொண்டு வந்து நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இல்லாதொழிப்போம் என்று கூறினார்.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்குப் பதிலாக 19இன் அதிகாரங்களுடன் ஒப்பிடும்போது அது அதிகரிக்கப்பட்டுள்ளது. பிரதமரை பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் 19இல் இருக்கவில்லை, 22 இல் உண்டு.

பிரதமரை நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது மற்றும் பிரதமரின் அறிவுறுத்தலின்படி அமைச்சரவையை நியமிப்பது என்ற 19 இல் உள்ள ஏற்பாடு திருத்தப்பட்டுள்ளது. 19 இல் ஜனாதிபதி அமைச்சுப் பதவிகளை வகிக்க முடியாது என கூறப்பட்ட நிலையில், தற்போது 22 இல் ஜனாதிபதி அமைச்சுப் பதவிகளை வகிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த ஜனாதிபதி கடந்த மே 11 ஆம் திகதி நாட்டு மக்களுக்கு சொன்ன கதை பொய்யானது, மக்களை தினமும் ஏமாற்றி வருகின்றார். அது மாத்திரமன்றி அனைத்து சுயாதீன ஆணைக்குழுக்களும் செயல்படுகின்ற இடம்தான் அரசமைப்பு பேரவையாகும்.

கடந்த காலங்களில் அரசமைப்பு பேரவையில் பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதி மற்றும் பிரதமர் எதிர்க்கட்சித் தலைவர் போன்றோர் பரிந்துரைக்கும் ஏற்பாடு, நியமிப்பதில் இருந்தது. 19 இல் இதற்கான சம நிலை இருந்தது.

சபாநாயகரை நியமிப்பதற்கு பாராளுமன்றத்தின் அனுமதி பெற வேண்டும் என 22 இல் கொண்டுவரப்பட்டுள்ளது. அதாவது இந்த அரசாங்கத்தால் ஏழு பேரும் மற்ற எதிர்க்கட்சி குழுக்களுக்கு மூன்று பேருமே நியமிக்க முடியும். அப்படியானால் இந்த அரசாங்கமும் ஜனாதிபதியை யும் விஜயதாச ராஜபக்ஷவும் இந்நாட்டு மக்களையும் ஏமாற்றி விட்டனர்.

விஜயதாஸ ராஜபக்ஷ, மகாசங்கத் தலைமை பீடங்களுக்குச சென்று பெரும் மத தலைவர்களுக்கு வழங்கியது அல்ல, வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. சங்கைக்குரிய மகா தேரர்களையும் இவர்கள் ஏமாற்றியுள்ளனர். ஜனாதிபதி தனது அதிகாரத்தை தனது கைகளில் தொடர்ந்து வைத்துள்ளார் - என்றார். (ஐ)

# மன்னார் மாவட்டம் முழுவதும் பெற்றோல் பகிர்வில் புதியமுறை!

மன்னார், ஜூலை 04

மன்னார் மாவட்டத்தில் பெற்றோல் விநியோகம் தொடர்பாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டிமெல் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை விசேட அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

இதற்கு அமைவாக எதிர் வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தொடக்கம் மன்னார் மாவட்டம் முழுவதும் பிரதேச செயலகங்கள் ஊடாக வாகனங்களுக்கு எரிபொருள் அட்டையின் அடிப்படையில் பெற்றோல் விநியோகிக்கப்படும்.

பிரதேச செயலகங்களில் உள்ள கிராம அலுவலர்கள் பிரிவுகளை இணைத்து வாகனங்களுக்கு ஒருநாள் என வழங்கப் படும். ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கான நேரமும் முதல் நாள் அறிவிக்கப்படும்.

அத்துடன், சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு விசேடமாக வழங்கப் படும். எரிபொருள் விநியோகத் தின்போது சுகாதார திணைக் களத்தால் வழங்கப்படும் அட்டையுடன் பிரதேச செயலகத் தால் வழங்கப்பட்ட எரிபொருள் விநியோக அட்டையையும் கொண்டு வருதல் அவசியம். இது மன்னார் மாவட்ட உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

தற்போது மாவட்டத்தில் இரண்டு ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பும் நிலையத்தால் வழங்கப்பட்டாலும் எதிர்வரும் 15ஆம் திகதியின் பின்னர் ஏனைய எரிபொருள் நிலையங்களுக்கும் கிடைக்கப் பெற்றால் கிராமங்களுக்கு அருகில் உள்ள நிலையங்களில் வழங்கக்கூடியதாக இருக்கும்.

மாந்தை மேற்கு பிரதேசத்தில் எரிபொருள் நிலையம் இல்லாமையால் அருகிலுள்ள நிலையம் ஊடாக வழங்கப்படும்.

இதேபோன்று முசலி மற்றும் மடு பிரதேசத்தை சேர்ந்தவர்களுக்கும் அண்மைய நிலையங்களில் வழங்கப்படும் - என்று அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ஐ)

# காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால் தந்தையை அடித்து கொன்ற தனயன்!

## தாயாரும் உடந்தையான கொடூரம்

கொழும்பு, ஜூலை 04

மகனின் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் தாயுடன் சேர்ந்து தனது தந்தையை மண்வெட்டியால் தாக்கிக் கொலை செய்தார் தனயன்.

இந்தக் கொடூர சம்பவம் பதுளையில் இடம்பெற்றுள்ளது. பதுளை - கஹட்டருப்ப பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதான நபரே இவ்வாறு மண்வெட்டியால் தாக்கிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபரின் 33 வயதான மனைவியும் அவரது 17 வயதான மகனுமே இந்தக் கொலைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர் எனவும், அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பதுளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மகனின் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அவரைத் துன்புறுத்தியதே கணவரின் கொலைக்கான காரணம் எனச் சந்தேகநபரான மனைவி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

மேலும், மனைவி கடந்த மே மாதம் 31ஆம் திகதி இந்தக் கொலையை செய்து, மகனுடன் சேர்ந்து சடலத்தைக் காட்டில் வீசிவிட்டு பொலிஸ் நிலையத்தில் தனது கணவனைக் காணவில்லை என முறைப்பாடு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இன்றும் நாளையும் 3 மணிநேர மின்வெட்டு!

கொழும்பு, ஜூலை 04

இன்றும் நாளையும் நாளொன்றில் 3 மணித்தியாலங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஏ, பி, சி, டி, ஈ, எவ், ஜி, எச், ஐ, ஜே, கே, எல், பி, கியூ, ஆர், எஸ், யூ, வி, டபிள்யூ ஆகிய வலயங்களில் காலை வேளையில் ஒரு மணித்தியாலமும் 40 நிமிடங்களும், இரவில் ஒரு மணித்தியாலமும் 20 நிமிடங்களும்,

சிசி வலயங்களில் காலை 6.00 மணி முதல் 8.30 மணி வரை 2 மணித்தியாலமும் 30 நிமிடங்களும்,

எம், என், ஓ, எக்ஸ், வை, இசற் வலயங்களில் காலை 5.30 மணி முதல் 8.30 மணி வரை 3 மணித்தியாலங்களும் மின்வெட்டு இடம்பெறவுள்ளது. (ஐ)





# திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் சிவன், நாவலர் சிலைகள் திறப்பு

மன்னார், ஜூலை 04

**மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக நிகழ்வை முன்னிட்டு எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் இடம்பெற்றது.**

திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு சிவூ தியாகராஜா கருணானந்த குருக்கள் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நேற்றையதினம் திருக்கேதீஸ்வர ஆலய பாலாவி தீர்த்தக் கரையில் ஆறுமுக நாவலருக்கான சிலையும், திருக்கேதீஸ்வர ஆலயத்தில் உள்நுழையும் வீதியில் சுமார் 28 அடி உயரமான சிவன் சிலையும் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த பக்த அடியார்கள் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.



தொடர்ந்தும் இன்று திங்கட்கிழமை 4 ஆம் மற்றும் 5 ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நிறைவடையும். பின்னர் கிரியைகள் இடம்பெற்று 6 ஆம் திகதி புதன்கிழமை காலை சுப முகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேக பெருவிழா இடம்பெறவுள்ளது. (ஐ)

# யாழ். மாவட்ட இளைஞர் சம்மேளன தலைவராக துவாரகன் தெரிவானார்!

யாழ்ப்பாணம், ஜூலை 04

யாழ். மாவட்ட இளைஞர் சம்மேளன 2022 ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவு நேற்று யாழ்ப்பாணம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தத் தெரிவு கூட்டத்தில் யாழ் இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட பணிப்பாளர் திருமதி சிறிமேனன் வினோதினி மற்றும் மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் கே. கிருபைராஜா மற்றும் இளைஞர் சேவை மன்ற உத்தியோகத்தர்கள் இளைஞர் சம்மேளனங்களின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



யாழ். மாவட்ட இளைஞர் கழகங்களின் சம்மேளத்தின் தலைவராக நல்லூர் இளைஞர் சம்மேளனத்தின் தலைவர் சத்தியரூபன் துவாகரன் தெரிவு செய்யப்பட்டார். ஏனைய நிர்வாக உறுப்பினர்களும் தெரிவாகினர். (ஐ)

# கிளிநொச்சியில் 35 கொள்கலன்களில் பதுக்கி வைக்கப்பட்ட எரிபொருள் மீட்பு

கிளிநொச்சி, ஜூலை 04

கிளிநொச்சி கரடிப்போக்கு பகுதியில் 35 கொள்கலன்களில் எரிபொருள் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக குறித்த பகுதியில் உள்ள வீடு சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டது.

இதன்போது, அங்கிருந்து 33 கொள்கலன்களில் டீசலும், 1 கொள்கலனில் பெற்றோலும், மற்றுமொரு கொள்கலனில் 25 லீற்றர் மண்ணெண்ணெயும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இதன்படி ஏறத்தாழ 6800 லீற்றர் டீசலும், 200 லீற்றர் பெற்றோலும் சட்டத்துக்கப்புறம்பாக உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட உள்ளார் என்றும், சான்றுப் பொருட்களும் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் டீசல் லீற்றர் ஒன்று 1700 ரூபாய்க்கும், பெற்றோல் லீற்றர் ஒன்று 3000 ரூபாய்க்கும், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்று 1500 ரூபாய்க்கும் கறுப்பு சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# 1,100 எரிபொருள் நிலையங்கள் நாடு முழுவதும் பூட்டப்பட்டன!

கொழும்பு, ஜூலை 04

நாடு முழுவதும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விநியோகத்தை நம்பியிருக்கும் ஆயிரத்து நூறுக்கும் மேற்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

இலங்கை பெற்றோலிய கூட்டத்தாபனத்திடம் எரிபொருள் கையிருப்பு கடுமையாகக் குறைந்துள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நிலைமை குறித்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையங்களின் தொழிற்சங்க தலைவர்களுடன் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர நேற்று முன்தினம் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார்.

இலங்கையில் எரிபொருளை இறக்குமதி செய்வதற்கும், சில்லறை விற்பனை செய்வதற்கும் தனியார் எண்ணெய் நிறுவனங்களை அழைப்பதற்கான முன்மொழிவுகள் குறித்து அமைச்சர் இதன்போது தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தார்.

அத்துடன், ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதத்துக்கான பெற்றோல் இறக்குமதி மற்றும் விநியோக திட்டம் குறித்தும் அவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. (ஐ)

# சகல பாடசாலைகளுக்கும் இந்த வாரமும் விடுமுறை!

## இணைய வழி கற்றலுக்கு ஏற்பாடு

கொழும்பு, ஜுலை 04

நாடளாவிய ரீதியில் அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற அனைத்து தனியார் பாடசாலைகளும் இன்று திங்கட்கிழமை முதல் 8ஆம் திகதி வரை மூடப்படும்.

சூம் ஊடாக கல்வி அமைச்சின் அதிகாரிகள், மாகாண கல்வி செயலாளர்கள் மற்றும் பணிப்பாளர்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களாக அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பங்கேற்பு மற்றும் எரிசக்தி அமைச்சின் எரிபொருள் விநியோகம் தொடர்பான நிலைமைகள் உள்ளிட்ட பல்வேறு காரணிகள் கலந்துரையாடப்பட்டதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு அடுத்த வாரம் விடுமுறை அறிவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பிரபாகரனால் முடியாததை கோட்டாபய செய்துவிட்டார்!

## இப்படி சொல்கிறார் துமிந்த

கொழும்பு, ஜுலை 04

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் 30 வருடங்களாக முயன்று தோல்வியுற்ற ஒன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இரண்டரை வருடங்களில் சாதித்துவிட்டார் என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸநாயக்க தெரிவித்தார்.

அண்மையில் அவர் கொழும்பில் நடத்தியசெய்தியாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

“வேலுப்பிள்ளை பிரபாகரன் இந்த நாட்டின் பொருளாதாரத்தை வீழ்த்த விரும்பினார். அதனால்தான் அவர் கொழும்பில் தாக்குதல்களை நடத்தினார். பல செயல்களை செய்தார். ஆனால், பிரபாகரனால் 30 வருடங்களில் செய்ய முடியாததை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இரண்டரை வருடங்களில் செய்துள்ளார் என்பதை நாம் இப்போது புரிந்து கொண்டுள்ளோம்” என தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு அனைத்து தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் அழைப்பு விடுத்துள்ளார்.

# தற்போதைய நிர்வாகத்தின் கீழ் எந்த பதவியையும் பெறமாட்டேன்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால

கொழும்பு, ஜுலை 04

தற்போதைய நிர்வாகத்தின் கீழ் பிரதமராக பதவி வகிக்கும் எண்ணம் இல்லை - எந்த பதவியையும் ஏற்கப்போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மகா சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளமைபோல் அனைத்து கட்சி அரசாங்கத்தை விரைவில் ஏற்படுத்தாவிட்டால் நாடு விரைவில் கலவரங்களை சந்திக்கும் ஆபத்துள்ளது.

தற்போதைய அரசாங்கத்துக்கு நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கான அறிவும் திறமையும் இல்லை. அனைத்து அமைச்சர்களும் பதவி விலக வேண்டும். அனைத்து கட்சி அரசாங்கத்தை உடனடியாக அமைக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள அவர், தற்போதைய அரசாங்கம் பதவி விலகி அனைத்து கட்சி அரசாங்கத்துக்கு வழி விடவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.



22ஆவது திருத்தம் ஜனநாயக தன்மையை கொண்டதல்ல ,புதிய சீர்திருத்தங்களுக்கு எதிராக எங்கள் கட்சி நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளவுள்ளது. 22ஆவது திருத்தத்தின் மூலம் சர்வதேசத்தின் உதவி கிடைக்காது என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# எரிபொருள் நெருக்கடிகளால் தூதரகங்கள் மூடப்படுகின்றன!

கொழும்பு, ஜுலை 04

**நாட்டில் ஏற்பட்டுள்ள மோசமான எரிபொருள் தட்டுப்பாட்டால் கொழும்பில் உள்ள ஒரு மேற்கத்திய தூதரகம் ஒரு வாரத்தில் மூடப்படும் என எச்சரித்துள்ளது. ஏனைய தூதரகங்களும் சேவைகளை குறைத்து வருகின்றன என்றும் கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இந்த மேற்கத்திய தூதரகத்தின் உயர்மட்ட இராஜதந்திரி ஒருவர், வெளிநாட்டு இராஜதந்திர பணிகள் சரியாகச் செயல்படுவதை உறுதி செய்வதற்கான சர்வதேச சட்டக் கடமைகளில் இலங்கை வெளியுறவு அமைச்சு தவறிவிட்டது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

“எங்களிடம் (தூதரகம்) எரிபொருள் தீர்ந்து போகிறது. இன்னும் ஒரு வாரத்துக்குத்தான் டீசல் இருக்கிறது. அதன் பிறகு நாம் மூட வேண்டும். எமது ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஒத்த எண்ணம் கொண்ட பங்காளிகளுடன் சேர்ந்து, கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சுக்கு சர்வதேச சட்டத்தின் இருந்து எழும் கடமைகளை (வியன்னா உடன்படிக்கையின் அடிப்படையில், வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்கள் சரியாகச் செயல்படுவதை நடத்தும் நாடுகள் உறுதிசெய்ய வேண்டும்.) உத்தியோகபூர்வமாக நினைவூட்டுவோம்.

முடிவெடுப்பபவர்கள் புரிந்து கொள்ள வேண்டும், தூதரகங்கள் சரியான சேவைகளை வழங்க முடியாவிட்டால் அல்லது மூடப்பட வேண்டியிருந்தால், வெளிநாட்டு மற்றும் உள்ளூர் பிரஜைகளுக்கு இனி எங்களால் சேவை செய்ய முடியாது, இது பயண ஆலோசனைகளை எதிர்மறையாக பாதிக்கும்”, என்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் உள்ள உயர்மட்ட பிரதிநிதிகளை தூதரக வளாகத்தில் சந்திப்பதற்கு மாத்திரமே தனது உத்தியோகபூர்வ வாகனத்தை பயன்படுத்துவதாக தெரிவித்துள்ளார்.

“நான் இனி அதிகாரப்பூர்வ பணிகளுக்கு செல்லவில்லை,” என்று அவர் கூறினார்.

இந்த நாட்களில் பெரும்பாலான மக்கள் செய்வது போலவே, தூதரக ஊழியர்கள் போக்குவரத்தில் பெரும் சிக்கல்களை அனுபவிக்கின்றனர். அத்தியாவசிய பணியாளர்கள் மட்டுமே பணிக்கு வருகின்றனர். மற்றவர்கள் முடிந்தவரை வீட்டிலிருந்து வேலை செய்கிறார்கள். “எவ்வாறாயினும், எங்கள் விசா பிரிவு ஊழியர்கள் ஆஜராகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள், இது சமமற்ற மற்றும் நியாயமற்ற முறையில் நடத்தப்படுவதைக் காட்டுகிறது” என்று அவர் மேலும் கூறினார்.

இலங்கை மிகவும் நெருக்கடியான நிலையில் இருப்பதால் சர்வதேச சமூகத்தின் உதவிகளை கோரியுள்ளது.

“தற்போது மனிதாபிமான உதவிகளை வழங்குமாறு நாடுகளை நம்ப வைக்க முயற்சிக்கிறது. இலங்கைக்கான மனிதாபிமான உதவிகளை நாம் பரிசீலிக்க வேண்டிய நாள் வரும் என்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை. கடந்த வாரம் அந்த நேரம் வந்தது,

மருந்துகள் மற்றும் உணவு போன்ற மனிதாபிமான உதவிகளை வழங்குமாறு எனது அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டேன்,” என்று அவர் மேலும் கூறினார்.

வெள்ளிக்கிழமை, இந்திய உயர் ஸ்தானிகராலயம் தனது தூதரக சேவைகளை வாரத்தின் மூன்று நாட்களுக்கு - புதன், வியாழன் மற்றும் வெள்ளி ஆகிய மூன்று நாட்களுக்கு குறைப்பதாக அறிவித்தது, இது இந்தியாவிற்கு பயணிப்பவர்களுக்கு விசா வழங்குவதை பாதிக்கிறது.

எவ்வாறாயினும், நாட்டை விட்டு வெளியேற விரும்பும் மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதன் காரணமாக வாரத்தின் வேலை நாட்கள் முழுவதும் தனது தூதரக சேவைகளை மீண்டும் தொடங்குவதாகவும், யாழ்ப்பாணம், திருகோணமலை, மாத்தறை, கண்டி மற்றும் குருநாகல் ஆகிய பிராந்திய தூதரக அலுவலகங்களும் செயல்படும் என்றும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# மிதிவண்டிகளை வாங்கவும் வரிசை

கொழும்பு, ஜுலை 04

நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான எரிபொருள் நெருக்கடியால் ஜாஎல பிரதேசத்தில் சைக்கிள்களை கொள்வனவு செய்வதற்காக பெருமளவான பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர்.

பலரும் தங்கள் தேவைகளை நிறைவேற்ற சைக்கிள்களை கொள்வனவு செய்ய ஆர்வம் காட்டுகின்றனர்.

இதனார், ”சைக்கிள்களுக்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக” ஜாஎல பொலிஸ் தலைமையக பரிசோதகர் கே.டி.எஸ். பால சூரியா தெரிவித்துள்ளார். (ஐ-சி)

# சட்டவிரோத வெளிநாட்டு பயணம் 25 பேர் மாரவிலவில் கைதாகினர்!

கொழும்பு, ஜுலை 04

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாகக் கடல் மார்க்கமாக வெளிநாடு செல்வதற்குத் தயாராக இருந்த 25 பேர் மாரவில பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பில் கடற்படையின் ஊடகப்பிரிவு நேற்று விடுத்துள்ள அறிக்கையில்,

“இலங்கை கடற்படை, இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் பொலிஸார் இணைந்து நேற்று (நேற்றுமுன்தினம்) மாரவில பிரதேசத்தில் நாட்டிலிருந்து சட்டவிரோதமாகக் கடல் மார்க்கமாகச் செல்வதற்குத் தயாராக இருந்தனர் எனச் சந்தேகிக்கப்படும் 9 ஆண்கள், 6 பெண்கள் மற்றும் 10 சிறுவர்கள் உட்பட 25 பேரைக் கைது செய்துள்ளனர். இவர்கள் 25 பேரும் ஒரே வீட்டில் தங்கியிருந்த வேளை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மட்டக்களப்பு, வாழைச்சேனை மற்றும் ஹலவத்தை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

25 பேரும் மேலதிக விசாரணைகளுக்காக மாரவில பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்” - என்றுள்ளது. (ஐ)

# அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 51 பேர் திருமலையில் கைதாகினர்!

திருகோணமலை, ஜுலை 04

திருகோணமலை கடற்பரப்பில் இருந்து சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 51 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் நேற்று அதிகாலை திருகோணமலை அலர்தோட்டம் கடற்கரையிலிருந்து 12 கிலோமீற்றர் தூரத்தில் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கம்பஹா மற்றும் இரத்தினபுரி பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள்.

கைதானவர்களில், 41 ஆண்கள், 5 பெண்கள், ஐந்து சிறுவர்கள் இருந்தனர். இவர்கள் அனைவரும் திருகோணமலை கடற்படை முகாமுக்கு விசாரணைகளுக்காக அழைத்து செல்லப்பட்டுள்ளனர் என்று அறிய வருகின்றது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கடற்படையினரின் விசாரணைகளுக்கு பின்னர் திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

**பிரமிளா கிருஷ்ணன்**



# திரௌபதி முர்மூ ஆதரவு நிகழ்வில் வெளிப்பட்ட ஓபிஎஸ், இபிஎஸ் பூசல்

# என்ன நடந்தது?

**தே**சிய ஜனநாயகக் கூட்டணியில் குடியரசு தலைவர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்ட திரௌபதி முர்மூவை தனித்தனியாக சந்தித்து அதிமுகவின் ஆதரவை அக்கட்சியின் எடப்பாடி பழனிசாமியும், ஓ.பன்னீர் செல்வமும் தெரிவித்துள்ளனர். இருவரும் தங்களுடைய ஆதரவாளர்களுடன் திரௌபதி முர்மூவை சந்தித்த அதே சமயம், அதிமுகவின் வாக்கு வங்கி சிந்தாமல் சிதறாமல் தங்களுக்கே வர வேண்டும் என்பதால் இரு தரப்புக்கும் பாஜக மேலிடம் சமமான முக்கியத்துவத்தை அந்த நிகழ்வில் கொடுத்திருப்பதாகத் தோன்றுகிறது. இது எந்த அளவுக்கு உண்மை? இன்று என்ன நடந்தது?

குடியரசு தலைவர் தேர்தலில் கூட்டணி கட்சி எம்.பி, எம்எல்ஏக்களின் ஆதரவை பெறுவதற்காக சென்னைக்கு வந்தார் திரௌபதி முர்மூ. சென்னையில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் இதையொட்டி ஒரு நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சி ஏற்பாடு செய்திருந்தது. விழா மேடையில் அதிமுக சார்பாக எடப்பாடி பழனிசாமி மற்றும் அவரது ஆதரவாளர்கள் மட்டுமே அமர்ந்திருந்தனர். ஓ.பன்னீர்செல்வத்துக்கும் மேடையில் இருக்கை போடப்பட்டிருந்தது. ஆனால், மேடைக்கு முதலில் இருந்தே ஓ பன்னீர்செல்வம் வரவில்லை.

இபிஎஸ் தரப்பு அரங்கில் இருந்து வெளியேறிய பிறகே, ஓபிஎஸ் தமது அவரது ஆதரவாளர்களுடன் அரங்கப் பகுதிக்கு வந்தார்.

குடியரசு தலைவர் வேட்பாளர் தேர்தலுக்காக, திரௌபதி முர்மூ வேட்புமனு தாக்கல் செய்தபோது, டெல்லிக்கு நேரடியாக சென்று தமது ஆதரவை ஓபிஎஸ் தெரிவித்திருந்தார். இருந்த போதும், சென்னைக்கு திரௌபதி முர்மூ ஆதரவு கோரி வந்த சமயத்தில், நிகழ்ச்சி மேடையில் அவருடன் அமராமல் ஓ. பன்னீர்செல்வம் தவிர்த்த செயல்பாடு, அனைவராலும் பெரிதும் கவனிக்கப்பட்டது.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள பிற கட்சிகளான தேமுதிக, பாமக, தமிழ் மாநில காங்கிரஸ் உள்ளிட்டவற்றின் தலைவர்கள் நிகழ்ச்சி அரங்கத்திற்கு வந்திருந்தனர்.

இந்த நிலையில், மேடையில் பேசிய எடப்பாடி பழனிசாமி, “திரௌபதி முர்மூவின் இமாலய வெற்றிக்கு அதிமுக ஆதரவாக இருக்கும்,” என்று உறுதியளித்தார். அத்துடன், திராவிட மாடல் மற்றும் சமூக நீதி உள்ளிட்டவற்றை பற்றிப் பேசும் திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் பழங்குடியின வேட்பாளரான திரௌபதி முர்மூவுக்கு ஆதரவு தரவில்லை என்றும் எடப்பாடி பழனிசாமி விமர்சித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற பிறகு எடப்பாடி பழனிசாமி தரப்பினர் வெளியே சென்றனர். அவர்களைத் தொடர்ந்து மேடை ஏறிய ஓ.பன்னீர்செல்வம், ஒடிஷா மாநிலத்தின் அமைச்சராகவும், ஜார்கண்ட் மாநிலத்தின் ஆளுநராகவும் பணியாற்றிய பல அனுபவங்களை பெற்றுள்ள திரௌபதி முர்மூ நாட்டின் குடியரசு தலைவராக பணியாற்ற தேர்வு செய்யப்பட வேண்டும் என்றும் அதற்கு அவர் தகுதியான சிறந்த நபர் என்றும் கூறினார்.

மேலும், மறைந்த முதல்வர் ஜெயலலிதா உயிரோடு இருந்திருந்தால், நிச்சயம் திரௌபதி முர்மூவை குடியரசு தலைவராக பார்ப்பதில் பெருமகிழ்ச்சி அடைந்திருப்பார் என்றும் பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

### “பொதுக்குழுவுக்கே உச்ச அதிகாரம்”

இதற்கிடையே, விடுதி அரங்கை விட்டு எடப்பாடி பழனிசாமி தமது ஆதரவாளர்களுடன் வெளியே வந்தபோது அவரிடம் ஒரே கட்சியை சேர்ந்த நீங்களும் ஓ.பன்னீர்செல்வமும் ஏன் தனியாக மேடைக்கு வந்தீர்கள் என செய்தியாளர்கள் கேட்டனர். அப்போது அவருடன் இருந்த முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்தார்.

“குடியரசு தலைவர் வேட்பாளராக பழங்குடி இனத்தை சேர்ந்த ஒருவரை தேர்வு செய்வது சரியான ஒன்றுதான். இபிஸ் ஒன்றை தற்போது தெளிவுபடுத்தினார். அப்துல் கலாமை குடியரசு தலைவராக நிறுத்தியபோது, அதிமுகவின் அப்போதைய பொதுச் செயலாளராக இருந்த ஜெயலலிதா தமது முழு ஆதரவை வழங்கினார். அதேபோல, தற்போது திரௌபதி முர்மூவுக்கு ஆதரவு தருவதற்கு அதிமுக முடிவு செய்து அதை இபிஎஸ் அறிவித்துள்ளார். அதிமுகவில் பொதுகுழுதான் இறுதி அதிகாரம் படைத்தது. உலகளவில் ஐ.நா சபை எப்படி எல்லா நாடுகளுக்கும் தலைமையாக இயங்குகிறதோ, அதுபோலவே, அதிமுகவில் பொதுக்குழு என்ற அமைப்புதான் அதிக அதிகாரம் கொண்டது. பொதுக்குழுவின் முடிவிற்கு ஓபிஎஸ் கட்டுப்பட்டிருக்க வேண்டும், அதிமுக சட்டத்தின்படி அவர் செயல்பட்டிருந்தால், தனியாக சென்று குடியரசு தலைவர் வேட்பாளரை சந்திக்க வேண்டிய தேவை இருந்திருக்காது,” என்று ஜெயக்குமார் கூறினார்.



ஓ.பன்னீர்செல்வம் புறக்கணிக்கப்படுகிறாரா என செய்தியாளர்கள் கேட்டபோது, “அதிமுகவை பொறுத்தவரை தொண்டர்களின் நாடியாக இருப்பது பொதுக்குழு. அந்த பொதுகுழுவே ஒற்றை தலைமை தான் கட்சிக்குத் தேவை என்றும் அந்த தலைமை இபிஎஸ் ஆக இருக்க வேண்டும் என்றும் முடிவு செய்துள்ளது. அதை ஏற்காமல் இருப்பதால் ஓபிஎஸ் தனியாக சென்று திரௌபதி முர்மூவை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது,” என்று ஜெயக்குமார் பதிலளித்தார்.

### நானே ஒருங்கிணைப்பாளர்: ஓபிஎஸ்

இதைத் தொடர்ந்து திரௌபதி முர்மூவுக்கு ஆதரவு தெரிவித்த பின்னர் வெளியே வந்த ஓ.பன்னீர்செல்வத்திடம் ஏன் தனியாக மேடை ஏறினீர்கள் என்று செய்தியாளர்கள் கேட்டனர். அதற்கு அவர், “குடியரசு தலைவர் வேட்பாளரான திரௌபதி முர்மூவுக்கு அதிமுகவின் இதயபூர்வ ஆதரவை நான் தெரிவித்தேன். சட்டவிதிப்படி நான்தான் கழகத்தின் ஒருங்கிணைப்பாளராக இன்றுவரை செயல்பட்டு வருகிறேன்,” என்று கூறினார்.

அதிமுகவில் ஓ.பன்னீர்செல்வம் வகித்து வந்த ஒருங்கிணைப்பாளர் பதவி காலாவதியாகி விட்டது என எடப்பாடி பழனிசாமி தரப்பு கூறியது பற்றி கேட்டதற்கு, எந்த பதிலும் சொல்லாமல் அவர் புறப்பட்டுச் சென்றார்.



### தனித்தனி மரியாதை அவசியமா?

ஓபிஎஸ்-இபிஎஸ் தனித்தனியாக குடியரசு தலைவர் வேட்பாளருக்கு ஆதரவு தர ஏற்பாடு செய்தது பற்றி பாஜக துணை தலைவர் நாராயணன் திருப்தியிடம் பேசினோம்.

“எங்களை பொறுத்தவரை அதிமுகவில் ஏற்பட்டுள்ள பிளவு என்பது அவர்களின் உள்கட்சி விவகாரம். அதில் நாங்கள் தலையிட முடியாது. அப்படி செய்தால், அது தவறாகும். அவர்கள் இருவரும் பிளவுபட்டு இருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் வெளிப்படையாக தெரியும். எங்கள் வேட்பாளருக்கு வாக்கு சேகரிப்பது மட்டும்தான் எங்களின் பொறுப்பு,“ என்கிறார் நாராயணன்.

அதிமுக கூட்டணி கட்சி யாக இருப்பதால், குடியரசு தலைவர் தேர்தல் வரை அந்த பிளவை பெரிதுபடுத்தாமல் பாஜக காத்திருக்கிறதா என்றும் ஓபிஎஸ் மீது பாஜக அனு தாபத்துடன் செயல்படுகிறதா கேட்டபோது, “அதிமுகவில் ஏற்பட்டுள்ள பிரச்னையை சரி செய்யவேண்டிய அவசியம் பாஜகவுக்கு இல்லை. பாஜக ஓபிஎஸ்சுக்கு அனுதாப பார்வை காட்டுகிறது என்பது மற்றவர்களின் பார்வை.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

## உக்ரைனுக்கு ஏமாற்றமளித்த ஜி 7 உச்சி மாநாடு!

# வழக்கமான சொல்லாடல்களுடன் மாநாடு கூடிக் கலைந்திருக்கிறது!!



உக்ரைன் விவகாரத்தில் ஒரு தெளிவான நிலையை ஜெர்மனியில் கூடிய ஜி7 மாநாடு எடுக்கும் என்ற எதிர்பார்ப்பு பொய்த்திருக்கிறது. மாநாட்டில் பங்கேற்றோர் உக்ரைன் விவகாரத்தை மென்மையாகக் கையாண்டது ரஷ்ய ஆக்கிரமிப்பில் இருக்கும் உக்ரைன் மக்களுக்கு நிச்சயம் ஏமாற்றம் அளித்திருக்கும்.

உக்ரைனுக்கு ஆதரவாக இருப்பதாக ஜி7 மாநாடு பெயரளவில் அறிவித்துள்ளது. ரஷ்யாவின் வேகத்தைக் கட்டுப்படுத்த அதன் எரிபொருள் விலையைக் கட்டுப்படுத்தும் கொள்கையை அறிவிக்க ஜி7 நாடுகள் தயாராகி வருகின்றன. இதனால் உக்ரைன் மீதான போர் முடிவுக்கு வருமா என்பது தெரியவில்லை.

வளர்ச்சியடைந்த பொருளாதார நாடுகள் ஒருங்கிணைந்து உருவாக்கிய அமைப்பே ஜி7 கூட்டமைப்பாக செயல்பட்டு வருகிறது. ஆறு நாடுகள் இணைந்து 1975-இல் உருவாக்கிய அமைப்பில் 1976-இல் கனடாவும் 1998-இல் ரஷ்யாவும் இணைந்தன. அதன் பிறகு ஜி8 நாடுகளின் கூட்டமைப்பில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், ரஷியா, கனடா ஆகிய நாடுகள் அங்கம் வகித்தன.

உக்ரைனின் ஒரு பகுதியாக இருந்த கிரீமியாவை ரஷ்யா ஆக்கிரமித்ததால், 2014-இல் ஜி8 நாடுகளிலிருந்து ரஷ்யா நீக்கப்பட்டது. அதன் பிறகு இந்த அமைப்பு ஜி7 கூட்டமைப்பாக செயல்பட்டு வருகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் இதன் ஆண்டுக் கூட்டத்தில் கலந்துகொள்வது மரபாக உள்ளது.

இத்தகைய வரலாற்றுப் பின்புலம் கொண்ட ஜி7 கூட்டமைப்பின் இந்த ஆண்டு மாநாடு, உக்ரைன் மீது போர் தொடுத்திருக்கும் ரஷ்யாவைக் கண்டிக்கும் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. உக்ரைன் அதிபர் ஸெலென்ஸ்கியும் காணொலி முறையில் இம்மாநாட்டில் பேசினார். தங்கள் நாட்டுக்கு எதிராக ரஷ்யா நடத்தி வரும் போரை, குளிர்காலத்துக்குள் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகளை தீவிரப்படுத்த வேண்டும் புட்டினின் படைகளுக்கு எதிரான போராட்டத்துக்கு மேலும் ஆயுதங்களை வழங்க வேண்டும் ஆகிய வேண்டுகோள்களை அவர் முன்வைத்தார்.

இந்த விவகாரம் குறித்து தீவிரமாக விவாதிக்கப்பட்டபோதும், ரஷ்யாவுக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை ஜி7 மாநாடு எடுக்கவில்லை. மாறாக, சீனா நடைமுறைப்படுத்திவரும் சாலை வழி திட்டத்தை எதிர்கொள்ளும் வகையில், சர்வதேச கட்டமைப்பு முதலீட்டுக்கான கூட்டமைப்புத் திட்டத்தை 2027-ஆம் ஆண்டிற்குள் ரூ. 45 லட்சம் கோடியில் (இந்திய ரூபா) நிறைவேற்ற உள்ளதாக ஜி7 மாநாடு அறிவித்திருக்கிறது. சர்வதேச அளவில் ரஷ்ய ஆக்கிரமிப்பை விட சீனாவின் வளர்ச்சியே ஜி7 நாடுகளுக்கு உறுத்தலாக இருப்பதையே இத்தீர்மானம் வெளிப்படுத்துகிறது.

ஐ.நா. விதிகளை மதித்து, பிரச்னைகளுக்கு அமைதி வழியில் தீர்வு காணவும், மற்ற நாடுகளுக்கு எதிராக படைகளைப் பயன்படுத்தக் கூடாது எனவும் மாநாட்டில் உறுதி ஏற்கப்பட்டிருக்கிறது. இது சம்பிரதாயமான தீர்மானமாகவே கருதப்படும்.

மக்களின் பேச்சு சுதந்திரத்தைக் காக்க முன்னுரிமை அளிக்கப்படும். அமைதிவழி போராட்டங்களுக்கு மதிப்பளிக்கப்படும். இணையவழி பாதுகாப்பு உறுதி செய்யப்படும். பருவநிலை மாற்றம், கரோனா தொற்றுப்பரவல், சர்வதேச விதிகள் அடிப்படையிலான செயல்பாடு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்துச் செயல்படுவோம் என்று ஜி 7 மாநாட்டுக் கூட்டறிக்கை கூறுகிறது.

இம்மாநாட்டில் இந்த ஆண்டு, இந்தியா, தென்னாப்பிரிக்கா, இந்தோனேசியா, ஆர்ஜென்டீனா, செனகல் ஆகிய ஐந்து நாடுகள் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்றன. இந்தியா மூன்றாவது ஆண்டாக இம்மாநாட்டில் பங்கேற்றது. சிறப்பு பங்கேற்பாளர்களில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி விசேஷ கவனம் பெற்றதையும் காண முடிந்தது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கி ரமிப்பு நடவடிக்கைகளை ஜி7 நாடுகள் கண்டித்து வரும் சூழலில், ரஷ்யாவுடன் தொடர்ந்து பொருளாதார உறவு கொண்டிருக்கும் இந்தியாவை அந்நாட் டுத் தலைவர்களால் புறக்கணிக்க முடியவில்லை. சீனாவுக்கு எதிரான தங்கள் எதிர்காலத் திட்டத்துக்கு இந்தியாவின் உதவி தேவை என்பதும் இதற்குக் காரணமாக இருக்கக் கூடும்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி தனது கருத்துகளை முன்வைக்க சிறந்த வாய்ப் பாக இந்த மாநாட்டை பயன்படுத்திக் கொண்டார். ஜி7 நாடுகளின் தலைவர்களுடன் அவர் இயல்பாக அள வளாவி இந்தியாவின் செல்வாக்கை வெளிப்படுத்தினார். பருவநிலை, எரிசக்தி, சுகாதாரம் குறித்து மாநாட்டில் பேசிய அவர், ஒவ்வொரு நாட்டிலும் பூமியைக் காக்கும் மக்களை உருவாக்க வேண்டும் அப்போதுதான் புவி வெப்பமயமாதலைத் தடுக்க முடியும் என்று கூறினார்.

உலக அளவில் மக்கள்தொகையில் இரண்டாவது பெரியநாடாக இருந்தபோதும் மரபுசாரா எரிசக்திப் பயன்பாட்டில் 40 வீதத்தை 9 ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியா எட்டியதையும், பெட்ரோலுடன் எத்தனால் கலப்பது தொடர்பான இலக்கை வெற்றிகரமாக நிறைவேற்றி இருப்பதையும் பெரு மிதத்துடன் மோடி குறிப்பிட்டார். இந்தியாவின் பசுமைத் தொழில் நுட்ப, வர்த்தக நடவடிக்கைகளில் ஜி7 நாடுகள் முதலீடு செய்ய வேண்டும் என்று அழைப்பு விடுக்கவும் அவர் தவறவில்லை.



மொத்தத்தில் ஜி7 மாநாடு உக்ரைனுக்கு ஏமாற்றம் அளித்திருக்கிறது. இதில் விருந்தாளியாகப் பங்கேற்ற இந்தியா, உலக அரங் கில் தனது மதிப்பை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. சர்வதேச அளவில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ரூ. 33,000 கோடி (இந்திய ரூபா) செலவிட ஜி7 நாடுகள் முடிவெடுத்திருப்பது பாராட்டுக்குரியது. மற்றபடி, வழக்கமான சொல்லாடல்களுடன் மாநாடு கூடிக் கலைந்திருக்கிறது.

**(தினமணி)**

## திரௌபதி முர்மூ ஆதரவு நிகழ்வில் வெளிப்பட்ட...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டணி கட்சிகள் ஒவ்வொருவரின் வாக்கும் எங்கள் வேட்பாளருக்கு தேவை,“ என்கிறார் அவர்.

**“இரு தரப்புக்கும் வேறு வாய்ப்பே இல்லை”**

அதிமுகவில் இரண்டு தலைவர்களும் தனியாக குடியரசு தலைவர் வேட்பாளரை சந்தித்தது குறித்து மூத்த பத்திரிகையாளர் குபேந்திரனிடம் பேசினோம்.

“ஒரே கட்சியை சேர்ந்த தலைவர்கள் இருவரும் தனித்தனியாக சந்தித்துள்ளதால், அவர்கள் மத்தியில் உள்ள இடைவெளியை அவர்கள் வெளிப்படையாக காட்டுகிறார்கள் என்பதுதான் அர்த்தம். மேடையில் முதலில் ஓபிஎஸ் வராமல், தனியாக அறையில் இருந்தது அவர் கட்சியில் மேலும் பலவீனமாக இருப்பதை உணர்த்துகிறது. இது ஒரு சம்பிரதாய நிகழ்வுதான். இந்த கூட்டத்தில் இபிஸ் தனது ஆதரவாளர்களுடன் மேடை ஏறி, ஆதரவு தெரிவித்து உரையும் நிகழ்த்தியுள்ளார். இது எடப்பாடி பழனிசாமியின் உறுதியைக் காட்டுகிறது. இருவருக்கும் அங்கு இருக்கை இருந்திருக்கும். ஓபிஎஸ் தனியாக வந்ததை பின்னடைவாகதான் பார்க்கவேண்டும்,“ என்கிறார் குபேந்திரன்.

மேலும் அதிமுகவில் பிளவு இருப்பதை உணர்ந்திருந்தாலும், இரண்டு தரப்பையும் பாஜக மேடைக்கு அழைத்துள்ளது பற்றி கேட்டதற்கு, “அதிமுகவின் வாக்கு தேவை என்பதால், இரு தரப்புக்கும் பாஜக முக்கியத்துவம் தருகிறது என்று சொல்ல முடியாது. பாஜகவுக்கு எந்த நிர்பந்தமும் இல்லை. ஆனால் அதிமுகவில் ஓபிஎஸ்-இபிஎஸ் என இரண்டு தரப்பினருக்கும் பாஜகவிற்கு ஆதரவு தருவதை தவிர வேறு வழியோ வாய்ப்போ இல்லை. அதிலும், தான் தனித்து விடப்பட்டிருப்பதை போல ஓபிஎஸ் காட்டிக் கொள்வதால், பாஜகவின் அனுதாபம் அவருக்கு தேவை என்றே பார்க்க முடிகிறது,“ என்கிறார் அவர்.

இதுநாள் வரை ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி இடையிலான தலைமை தொடர்பான கசப்புணர்வு, கட்சிக்குள்ளேயும் தலைமைக்கழக வளாகத்துக்கு உள்ளேயும்தான் நீடித்தது. கட்சி விஷயங்களை கட்சிக்குள்ளேதான் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என இரு தரப்பினரும் கூறி வந்தனர். அவர்களின் பூசல்கள், இப்போதுதான் முதல் முறையாக கட்சி அலுவலகம், கட்சி நிகழ்ச்சி தாண்டி, பொதுவெளியில் வெளிப்பட்டி ருப்பதாக அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.


**(பிபிசி)**


# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்





37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுகள் எது?



1)
2)
3)

38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?





1) 2) 3)



39. 3 4 3 = 15 இங்கு ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



1) 2) 3)

**01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..............................

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..............................

iii) அ்.றிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..............................

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..............................

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..............................

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..............................

(6 புள்ளிகள்)

**02)** அ்.றிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..............................

(1 புள்ளி)

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

# விடைகள்

**37. 1** **38. 2** **39. 1** **40. 2**

**01.** 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

**02.** விழுகின்றன

**03.** அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

**04.** 1) ✗ 2) ✓ 3) ✗ 4) ✗

**05.** ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?




**04.07.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல்<br>மறு ஒளிபரப்பு<br>அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |




**04.07.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ஆற்றில் மட்டி எடுத்தவர் மூச்சுத்திணறி மரணம்!

வாழைச்சேனை, ஜூலை 04

ஆற்றில் மட்டி எடுத்துக் கொண்டிருந்த 60 வயது பெண்ணொருவர் நேற்று மதியம் உயிரிழந்தாரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஓட்டமாவடி ஆற்றில் இவர் மட்டி எடுத்துக் கொண்டிருக்கும் போதே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

மட்டி எடுத்துக் கொண்டிருந்தபோது ஏற்பட்ட மூச்சுத்திணறலாலேயே இவர் மரணமடைந்தார் என்று பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்தது.

இவ்வாறு மரணமடைந்த பெண் கிண்ணையடி சுங்கான்கேணியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பெண்களின்விவரங்கள் திரட்டல் துஷ்பிரயோகங்கள் இடம்பெறலாம்!

## மட்டக்களப்பு மாநகர மேயர் எச்சரிக்கை

மட்டக்களப்பு, ஜூலை 04

**மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தால் பெண்களின் தொடர்பு இலக்கங்கள் சேகரிக்கப்படுகின்றன. இது தவறான செயல்களுக்கு வழிவகுக்கலாம் என்று மட்டக் களப்பு மாநகர சபையின் முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்துள்ளார்.**

அத்துடன், பெண்களின் தொடர்பு இலக்கங்களை இவ்வாறு கோருவது தவறான விடயம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெண்களின் தொலைபேசி இலக்கங்கள் சேகரிக்கப்படுவதானது, தனித்துவாழும் பெண்களுக்கும், மற்றும் யுவதிகளுக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமையும். மேலும், இது ஒரு பாரதூரமான விடயம்.

இதேசமயம் ஜனாதிபதி கோட்டாபய வெளியிடப்பட்ட சுற்றிக்கைக்கு அமைய மட்டக் களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் செயல்படாது, அரசியல் கட்சி ஒன்றின் அழுத்தங்களுக்கு அமைய செயற்பட்டு வருகிறார் என்றும் தி.சரவணபவன் குற்றம் சுமத்தியுள்ளார். (ஐ)

# அம்பாறையில் அதிகரிக்கும் மின்சக்தி சைக்கிள் பாவனை!

கல்முனை, ஜூலை 04

அம்பாறை மாவட்டம் கல்முனை, சாய்ந்தமருது, நிந்தவூர் பகுதிகளில் மின் சார சக்தியில் சைக்கிளை தற்போது பொதுமக்கள் பரவலாக பயன்படுத்து வதை அவதானிக்க முடிகின்றது.

சுமார் மணிக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் செல்லும் சைக்கிள்களின் பாவனை அதிகளவில் உள்ளன. இந்த சைக்கிளின் பெறுமதி இலங்கை ரூபாயில் 2 இலட்சம் என்று கூறப்படுகின்றது.

8 மணித்தியாலங்கள் மின்சாரத்தின் உதவியுடன் சார்ஜ் செய்யப்படும் இந்த சைக்கிள் மின்சார மின் கலத்தின் சக்தியுடன் விரைவாக பயணத்தை ஆரம்பிக்கின்றது.

எரிபொருள் இல்லாமல் இந்த சைக்கிளை இலகுவாகப் பயன்படுத்தலாம். இரவிலும் மின்னொளியை பயன்படுத்தி பயணிக்க முடியும்.

மேலும் வீதியில் பயணிக்கின்ற போது எதிரே வருகின்ற வாகனங்களுக்கு சமிஞ்சை வழங்கக்கூடிய வசதியையும்கொண்டுள்ளது. ஒரே தடவையில் சுமார் 100 கிலோமீற்றர் தூரம் பயணிக்க முடியும். (ஐ)

# ஆயுள்வேத வைத்தியம் இலவச நடமாடும் சேவை!

மட்டக்களப்பு, ஜூலை 04

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டால் தம்பலகாமம் பிரதேச மக்கள் ஆயுள்வேத வைத்திய சேவைகளை பெறுவதில் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதையடுத்து இலவச ஆயுள்வேத நடமாடும் சேவை கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி. இ.ஸ்ரீதரால் இந்த சேவை தம்பலகாமத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த பல வருடங்களாக தம்பலகாமம் பிரதேச மக்கள் ஆயுள்வேத வைத்திய சிகிச்சையை பெறுவதற்காக பல கிலோ மீற்றர் தூரம் பயணிக்கும் நிலை ஏற்பட்டது. இந்நிலையிலேயே இந்த இலவச ஆயுள்வேத நடமாடும் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில், வைத்தியர்களான சமில் கருணாரத்ன, ரீ. கௌரிஸ்வரன், எ.ரி.எப்.முஸாபிறா, ஆகியோர்கள் கலந்துகொண்டு வைத்திய சிகிச்சைகளை வழங்கினர். (ஐ)

# நெருக்கடிகளை குறைப்பதற்கு உள்ளூர் போக்குவரத்து ஒழுங்கு

மூதூர், ஜூலை 04

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்து பிரச்னையை ஓரளவு சீர்செய்யும் நோக்கில் மூதூர் பிரதேச செயலாளர் எம். பி. எம். முபாரக் தலைமையில் நேற்று முன்தினம் மாலை கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

நோயாளர்களை பார்வையிடுவதற்காக வருகின்ற பொது மக்களுக்கு பஸ் சேவையை ஒழுங்குபடுத்தல், உரிய நேரத்துக்கு பாடசாலை மாணவர்களுக்கு பஸ் சேவையை வழங் குதல், பஸ் நிறுத்துமிடத்தில் ஏற்படும் இடர்பாடுகளை போக்குவரத்துப் பொலிஸாரின் உதவியைக் கொண்டு சீர் செய்தல் மற்றும் இலங்கத்துறை முகத் துவாரத்தில் இருந்து வருகின்ற பஸ்களை தோப்பூர் பிரதேசத்தின் ஊடாக வருவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளல் உள்ளிட்ட தீர்மானங்கள் இதன்போது எடுக்கப்பட்டன. (ஐ)

# மாமாங்கப் பிள்ளையார் ஆலய வண்ணக்கராக விக்ரமன் தெரிவு



மட்டக்களப்பு, ஜூலை 04

இராம பிரான் வழிபட்ட ஆலயமாகக் கருதப்படும் கிழக்கிலங்கையின் வரலாற்றுசிறப்புமிக்க ஆலயமான மட்டக்களப்பு ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் வண்ணக்கராக மீண்டும் விக்ரமன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு -அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தின் வண்ணக்கரை தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்று முன்தினம நடந்தது.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளருமான வி.வாசுதேவன் முன்னிலையில் நடைபெற்ற இந்தத் தேர்தலில், 1,258 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இதில், 661 வாக்குகள் செலுத்தப்பட்டன.

தேர்தல் முடிவில், தி. விக்ரமன் 551 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட மற்றைய வேட்பாளர் 63 வாக்குகளைப் பெற்றார். 22 வாக்குகள் செல்லுபடியற்ற வாக்குகளாக அறிவிக்கப்பட்டன.

உதவி வண்ணக்கர் தேர்தலில் சுரேந் திரகுமார் 451வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்த வெ.இளங்கோ 188 வாக்குகளைப் பெற்றார். (ஐ)

# கோதுமை மாவுடன் வந்த லொறி ஏறாவூரில் தடம்புரண்டு விபத்து!



ஏறாவூர், ஜூலை 04

மட்டக்களப்புக்கு கோதுமை மாவை ஏற்றிவந்த லொறி ஒன்று விபத்துக்குள்ளானது.

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதான வீதியில் வைத்தே இந்த விபத்துச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி கோதுமை மாவை ஏற்றி வந்தபோது சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைக்கலக்கம் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்தது.

இவ்வாறு விபத்துக்குள்ளான லொறியில் பயணம் செய்த சாரதியும் உதவியாளரும் காயங்களின்றி தப்பியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கதிர்காமம் செல்லும் பக்தர்களுக்காக திறக்கப்படுகின்றது காட்டுப்பாதை!

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவுக்குச் செல்லும் பாதயாத்திரீகர்களுக்காக காட்டுப் பாதை, எதிர்வரும் 22ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 05 ஆம் திகதி வரை திறக்கப்படவுள்ளது.

இது தொடர்பான தீர்மானம், அம்பாறை மாவட்ட செயலாளர் ஜே. எம். ஏ. டக்ளஸ் தலைமையிலான மாநாட்டில் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 22ஆம் திகதி உகந்தை முருகன் கோவிலில் காலை 6 மணிக்கு இடம்பெறும் பூசை வழிபாடுகளை தொடர்ந்து, காலை 7 மணிக்கு உத்தியோகபூர்வமாக காட்டுவழிப் பாதை யாத்திரிகர்களுக்காக திறந்துவிடப்பட இருக்கின்றது.

அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு திறக்கப்படும் பாதை தொடர்ந்து வரும் 14 நாட்கள் அதாவது ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி வரை காலை 6 மணிக்கு திறக்கப்பட்டு, மாலை 3 மணிக்கு மூடப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கதிர்காமம் முருகன் கோவிலின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் இந்த மாதம் 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, ஓகஸ்ட் 12ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

இதேவேளை, உகந்தை மலை முருகன் கோவிலின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் இந்த மாதம் 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, ஓகஸ்ட் 11ஆம் திகதி தீர்த்தோற் சவத்துடன் நிறைவடையவிருக்கின்றது.

மேற்படிகூட்டத்தில் அம்பாறை மாவட்டச் செயலாளர் ஜே.எம்.ஏ.டக்ளஸ், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன், மொனராகல மாவட்டச் செயலக பிரதிநிதி, கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ சீதாராம் குருக்கள், பாணமை விகாராதிபதி வண.சந்திரரத்ன ஹிமி, கோவில் தலைவர் சுதுநிலமே திஸநாயக்க உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மேலதி அரசாங்க அதிபர் ஜெகதீசன், தற்போது எரிபொருள் மற்றும் வளப் பற்றாக் குறைகள் இருக்கின்றபோதும் யாத்திரீகர்களின் தேவைகளை பூர்த்திசெய்கின்ற வகையில் திணைக்களங்கள் அர்ப்பணிப்பான சேவையை வழங்க முன்வந்திருப்பதாகவும் யாத்திரீகர்கள் குடிதண்ணீர் போன்றவற்றை சிக்கனமாக பயன்படுத்தி, அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். (ஐ)



## ஹொங்கொங்கில் கப்பல் விபத்து; 27 பேரை காணவில்லை; மூவர் மீட்பு

ஹொங்கொங், ஜூலை 04

தென்சீன கடல் பகுதியில் 30 பேருடன் பயணித்த கப்பல் ஒன்று நேற்று முன்தினம் திடீரென ஏற்பட்ட புயலில் சிக்கி இரண்டாக உடைந்ததில் அதில் பய ணித்த அனைவரும் நீரில் மூழ்கினர். இவ்வாறு மூழ்கி யவர்களில் மூவர் மட்டுமே மீட்கப்பட்டனர். 27 பேர் காணாமல் போயுள்ளனர்.

ஹொங்கொங்குக்கு தெற்கே 300 கிலோமீற்றர் தொலைவில் குவாங்டாங் மாகாண கடல் எல்லைக்குள் இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

கப்பல் பயணித்துக் கொண்டிருந்தபோது திடீ ரெனப் புயல் தாக்கியது. மணிக்கு 110 கிலோமீற்றர் வேகத்தில் வீசிய புயலின் தாக்கத்தால் கப்பல் இரண் டாக உடைந்தது. இதனால், கப்பலில் பயணித்த 30 பேரும் கடலில் விழுந்து தத்தளித்தனர்.

இந்த விபத்து குறித்து தகவலறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து மீட்புப் பணியில் ஈடு பட்டனர். இதில், 3 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். ஆனால், கப்பலில் பயணித்த எஞ்சிய 27 பேரின் நிலை என்ன ஆனது? என்பது குறித்து நேற்றுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை. இதனால், காணாமல் போன 27 பேரையும் தேடும் பணி தீவிரமாக நடை பெற்று வருகிறது.

மீட்புப் பணியில் இரண்டு விமானங்கள் நான்கு ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (ஐ)



## கொரோனா தொற்று பரவல் பிரான்ஸில் மீண்டும் உச்சம்!

முகக்கவசம் அணியுமாறு அறிவுறுத்து

பாரிஸ், ஜூலை 04

பிரான்ஸில் கோவிட் தொற்று நோய் மீண்டும் அதி கரித்துள்ளது. அத்துடன், மருத்துவமனை சேர்க்கையும் கணிசமான அளவு உயர்ந்து வருகிறது. இந்நிலையில், தொற்று நோயில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள மீண்டும் முகக் கவசம் அணியுமாறு அதிகாரிகள் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

பிரான்ஸில் கடந்த இரண்டு வாரங்களாக கோவிட் தொற்று நோயாளர் தொகையில் கணிசமான அதிக ரிப்பு ஏற்பட்டுள்ளது. அரசாங்கத் தரவுகளின்படி தின சரி கிட்டத்தட்ட 1,000 வரையானோர் மருத்துவமனை களில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தொற்று நோய் அதிகரித்து வருகின்ற போதும் கோவிட் கட்டுப்பாடுகளை மீண்டும் சட்ட ரீதியாக உடனடியாக அறிமுகப்படுத்தும் திட்டம் எதுவும் இல்லை என பிரான்ஸ் அரசாங்கத்தின் செய்தித் தொடர்பாளர் ஒலிவியா கிரிகோயர் தெரிவித்தார்.

கோவிட் கட்டுப்பாடுகளால் கடந்த காலங்களில் மக்கள் அதிக சிரமங்களை எதிர்கொண்டனர். இந்நிலையில் சட்டரீதியான கட்டுப்பாடுகள் அறிவிக் கப்படாவிட்டாலும் மக்கள் பொறுப்புடன் நடந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது என அவர் கூறினார்.

கடந்த மாதம் நடைபெற்ற பிரான்ஸ் பாராளுமன்ற தேர்தலில் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் கட்சி பெரும்பான்மையை பெறத் தவறியது. பிரான்ஸ் அர சின் முந்தைய தடுப்பூசி கட்டாய தடுப்பூசி மற்றும் கட்டாய முகக்கவச கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்த தீவிர வலது மற்றும் தீவிர இடது கட்சிகள் அதிக இடங்களில் வெற்றி பெற்றன.

இவ்வாறான நிலையிலேயே மீண்டும் கோவிட் கட் டுப்பாடுகளை இறுக்கமாக்க பிரான்ஸ் அரசாங்கம் தயங்குகிறது என்று கூறப்படுகிறது. (ஐ)

# ஐரோப்பாவில் குரங்கு அம்மை தொற்று பரவும் அபாயம் உயர்வு!

## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

ஜெனிவா, ஜூலை 04

ஐரோப்பிய நாடுகளில் குரங்கு அம்மை பரவும் ஆபத்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரித் துள்ளது.

குரங்கு அம்மையால் ஏற்படும் வெடிப்பைக் கட்டுப்படுத்தவும், மேலும் பரவுவதைத் தடுக்கவும், புதிய பாதிப்புகளைக் கண்டறிய வும் அனைத்து நாடுகளும் எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் கேட்டுள்ளது.

குரங்கு அம்மை நோய், பொது வாக காட்டு விலங்குகளிடமிருந்து மக்களுக்கு பரவுகிறது. சில ஆபி ரிக்க நாடுகளில் இந்த நோய் பரவி வருகிறது. இந்த நோய் உடல், சுவாச நீர்த்துளிகள் மற்றும் பிற அசுத்தமான பொருட்கள் மூலம் பரவுகிறது பொதுவாக காய்ச்சல், சொறி மற்றும் வீங்கிய நிணநீர் இந்த நோயின் அறிகுறிகளாகும்.

உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, மே 13 முதல் ஜூலை 1 வரை, 51 நாடுகளில் 5,100இற்கும் மேற்பட்டோருக்கு குரங்கு அம்மை நோய் பாதிப்பு உறுதிசெய்யப்பட்ட நிலையில், குரங்கு அம்மை நோய் பரவல் மே மாதத்தில் பரவாத நாடுகளில் பரவ தொடங்கியது.

கடந்த இரண்டு வாரங்களில் ஐரோப்பிய நாடுகளில் குரங்கு அம்மை பாதிப்பு மூன்று மடங்காக அதிகரித்துள்ளது என்று உலக சுகாதார நிறுவனத்தின் ஐரோப்பா தலைவர் நேற்று எச்சரித்துள்ளார். (ஐ)

# சிட்னியில் பெரும் வெள்ளம் மக்களை வெளியேற உத்தரவு

சிட்னி, ஜூலை 04

அஸ்திரேலிய நாட்டின் மிகப்பெரிய நகரமான சிட் னியில் பெய்து வரும் கனமழை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளதால், சிட்னியில் உள்ள ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தங்கள் வீடு களை விட்டு உடனடியாக வெளியேறுமாறு உத்தர விடப்பட்டுள்ளது.

தொடர் கனமழையால், சிட்னி நகரம் முழுவதும் வீதிகள் துண்டிக்கப்பட்டுள்ளன. கடந்த மார்ச் மாதத் தில் கடுமையான வெள்ளத்தில் மூழ்கிய மேற்கு சிட்னி யில் மீட்புப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கும் சிட்னி யின் தென்மேற்கு புறநகர்ப் பகுதியான கேம்டனில், கடைகள் மற்றும் பெற்றோல் நிலையங்கள் வெள்ளத் தில் மூழ்கியுள்ளன.

நியூ சவுத் வேல்ஸ் மாநில அவசரகால சேவை துறை மந்திரி ஸ்டெபனி குக் செய்தியாளர்களிடம் கூறுகை யில், "இது உயிருக்கு ஆபத்தான அவசர நிலை. வரவிருக்கும் நாட்களில் மோசமான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள் குறுகிய அறிவிப் பில் வீடுகளை விட்டு வெளியேற தயாராக இருக்க வேண்டும். மேலும், அவுஸ்திரேலியாவின் கிழக்கு கடற் கரையை ஒட்டிய சிட்னியின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் வசிப்பவர்கள், மோசமான வானிலை கார ணமாக தங்கள் பள்ளி விடுமுறை பயணத் திட்டங்களை ரத்து செய்து பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வேண்டும்" என்று எச்சரித்தார்.



அவசரகால சேவைகள் மூலம், 29 இடங்களில் வெள்ள மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலியாவில் காலநிலை மாற்றத்தால் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன. வறட்சி, காட்டுத்தீ மற்றும் வெள்ளம் ஆகியவை அங்கு தீவிர மாகியுள்ளன. (ஐ)

## முதலையுடன் திருமணம் மெக்சிக்கோவில் விநோதம்!

மெக்சிக்கோ சிற்றி, ஜூலை 04

மெக்சிக்கோ நகரின் மேயர் ஒருவர், முதலையை திரு மணம் செய்து கொண்ட விநோத நிகழ்வு நடந்துள்ளது.

மத்திய மெக்சிகோவில் உள்ள நகரம் சான் பெட்ரோ ஹுவமெலுலா. இதன் மேயராக உள்ளார் விக்ரர். இவர் அந்த ஊரின் பழங்கால சடங்கின்படி பெண் முதலை ஒன்றை சமீபத்தில் திருமணம் செய்து கொண்டார்.

திருமண நிகழ்வின்போது பாதுகாப்பு காரணங் களுக்காக பெண் முதலையின் வாய் கட்டப்பட்டி ருந்தது. திருமணத்தில் முதலை கிறிஸ்தவ முறைபடி வெள்ளை நிற கவுன் அணிந்திருந்தது.

மெக்சிகோவில் இந்த மாதிரியான விநோத திரு மணங்கள் நடப்பது இது முதன்முறை அல்ல. இந்த சடங்கு திருமணம் பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய ஹிஸ்பானிக் காலத்தைச் சேர்ந்த ஒக்ஸாகா மற்றும் ஹூவேவ் பழங்குடி சமூகங்களில் பின்பற்றப்பட்டு வந் தது. இயற்கையின் கருணையை வேண்டி இம்மாதிரியான சடங்குகள் பழங்குடிகளால் பின்பற்றப் படுகின்றது.

திருமணம் குறித்து மேயர் கூறும்போது, "இயற்கை யிடம் மழை, உணவு, மீன் வேண்டி நாங்கள் இந்த பிரார்த்தனையை செய்கிறோம். இது எங்கள் நம் பிக்கை" என்றார். (ஐ)



## சீனா, மியன்மாரில் நேற்று நிலநடுக்கம்

பீஜிங், ஜூலை 04

சீனாவின் வடமேற்கு அக்கி மாவட்டம் மற்றும் மியன்மாரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மித மான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

சீனாவின் வடமேற்கு பகுதியில் உள்ள அக்கி மாவட் டத்தில் பீஜிங் நேரப்படி காலை 6.02 மணிக்கு நிலநடுக் கம் ஏற்பட்டதாக சீன நிலநடுக்க மையம் தெரிவித் துள்ளது.

ரிக்டர் அளவுகோலில் 5.2 ஆக பதிவான இந்த நிலநடுக்கம் 40.88 பாகை வடக்கு அட்சரேகையிலும் 78.14 பாகை கிழக்கு தீர்க்கரேகையிலும் 10 கி. மீ. ஆழத்திலும் ஏற்பட்டுள்ளது. முன்னதாக நேற்று முன்தினம் அதிகாலை 3.29 மணியளவில் சீனாவின் ஜின்ஜியாங் பகுதியில் ரிக்டர் அளவுகோலில் 4.3 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

இதேபோன்று மியன்மாரில் நேற்றுகாலை 7.56 மணியளவில் ஏற்பட்ட திடீர் நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.0 ஆக பதிவானதாக தேசிய நில நடுக்கவியல் மையம் தகவல் தெரிவித்துள்ளது.

யாங்கூனில் இருந்து 260 கிமீ சுற்றளவில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா, மற்றும் மியன்மாரில் நிலநடுக்கத்தினால் சேதங்கள் ஏற்பட்டனவா? என்பது குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. (ஐ)

# 100 மீற்றரை 10 செக்கன்களில் ஓடி யுப்புன் அபயகோன் புதிய சாதனை

சூரிச், ஜூலை 04

இலங்கையின் நட்சத்திர குறுந்தூர ஓட்ட வீரர் யுப்புன் அபயகோன் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியை 10 செக்கன்களுக்குள் ஓடி முடித்து பெரும் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

சுவிற்சர்லாந்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ரெசிஸ்ப்ரின்ட் இன்டர்நெஷனல் 2022 மெய்வல்லுநர் போட்டியில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தை 9.96 செக்கன்களில் நிறைவு செய்து புதிய தெற்காசிய மற்றும் தேசிய சாதனைகளை நிலைநாட்டிய யுப்புன் அபயகோன் தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.

அத்துடன்,100 மீற்றர் ஓட்டப் போட்டியை 10 செக்கன்களுக்குள் ஓடிய முதலாவது தெற்காசிய வீரர் என்ற பெருமையையும் யுப்புன் அபயகோன் தனதாக்கினார்.

இந்தப் போட்டியில் கியூபா வீரர் மெனா ரேனியர் (9.99 செக்) இரண்டாம் இடத்தையும் பிரான்ஸ் வீரர் ஸெலே மெபா மைக்கல் (9.99 செக்.) 3ஆம் இடத்தையும் பெற்றனர்.

அது மட்டுமல்லாமல் 100 மீற்றர் ஓட்டப் போட்டியை வேகமாக நிறைவு செய்த ஆசியர்களில் 4ஆவது இடத்தை யுப்புன் பெற்றுள்ளார்.

கடந்த மே மாதம் 100 மீற்றர் ஓட்டப் போட்டியை 10.06 செக்கன்களில் ஓடிமுடித்து நிலைநாட்டிய தனது சொந்த தெற்காசிய மற்றும் தேசிய சாதனையை இப்போது யுப்புன் அபயகோன் புதுப்பித்துள்ளார்.

இரண்டு தினங்களுக்கு முன்னர் ஸ்டொக்ஹோம் டயமண்ட் லீக்கில் 100 மீற்றர் ஓட்டப் போட்டியை 10.21 செக்கன்களில் ஓடி முடித்து 4ஆம் இடத்தைப் பெற்ற யுப்புன் அபயகோன், புதிய சாதனை நிலைநாட்டியதை அடுத்து பேர்மிங்ஹாமில் இந்த மாதம் ஆரம்பமாகவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழாவில் இலங்கைக்கு பதக்கம் கிடைக்கக்கூடிய வாய்ப்பு அதிகரித்துள்ளது.




# இங்கிலாந்துடனான டெஸ்ட் பும்ரா புதிய உலக சாதனை

எஸ்பெஸ்டன், ஜூலை 04

இங்கிலாந்துக்கு எதிராக எஸ்பெஸ்டன் விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் 5 ஆவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஒரே ஓவரில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர் என்ற உலக சாதனையை இந்திய அணித் தலைவர் ஜஸ்ப்ரித் பும்ரா நிலைநாட்டியுள்ளார்.

இங்கிலாந்தின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான ஸ்ருவர்ட் பிரொட்டின் ஓவரிலேயே 10ஆம் இலக்க வீரரான பும்ரா உலக சாதனையை நிலைநாட்டினார்.

அந்த ஓவரில் 5 அகலப்பந்துகள், ஒரு முறையற்ற பந்து உட்பட மொத்தமாக 35 ஓட்டங்கள் (4, 5 அகலப் பந்துகள், முறையற்ற பந்தில் 6 (7), 4, 4, 4, 6, 1) பெறப்பட்டன. பும்ரா 29 ஓட்டங்களைப் பெற்று மேற்கிந்தியத் தீவுகளின் பிரைன் லாரா ஒரே ஓவரில் குவித்த 28 ஓட்டங்கள் என்ற டெஸ்ட் கிரிக்கெட் உலக சாதனையை முறியடித்தார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக 2004இல் ப்ரயன் லாரா நிலைநாட்டிய சாதனை 18 வருடங்களின் பின்னர் பும்ராவால் முறியடிக்கப்பட்டுள்ளது. மன்செஸ்டரில் கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் நடைபெறவிருந்த இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான 5ஆவதும் கடைசியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கோவிட் - 19 தொற்று காரணமாக பிற்போடப்பட்டது. அந்தப் போட்டியே 9 மாதங்கள் கழித்து எஜ்பெஸ்டனில் தற்போது நடைபெற்றுவருகின்றது.

இந்த வருடமும் கோவிட்-19 தொற்றினால் ரோஹித் ஷர்மா பாதிக்கப்பட்டுள்ளதால் அவருக்குப் பதிலாக அணித் தலைவராக ஜஸ்ப்ரிட் பும்ரா நியமிக்கப்பட்டார்.

அப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இந்தியா அதன் முதல் இன்னிங்ஸில் 416 ஓட்டங்களைக் குவித்தது.

ரிஷப் பந்த் 146 ஓட்டங்களையும் ரவிந்த்ர ஜடேஜா 104 ஓட்டங்களையும் குவித்ததோடு 6ஆவது விக்கெட்டில் 222 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். இதன் மூலம் அந்நிய மண்ணில் 6ஆவது விக்கெட்டில் சச்சின் டெண்டுல்கர் - அஸாருதீன் ஆகிய இருவரும் தென் ஆபிரிக்காவுக்கு எதிராக 1997இல் நிலைநாட்டிய 6ஆவது விக்கெட் இணைப்பாட்ட சாதனை சமப்படுத்தப்பட்டது.

பந்த், ஜடேஜா ஆகியோருக்கு அடுத்தபடியாக அதிகப்பட்ச ஓட்டங்களை பும்ரா பெற்றார். பும்ரா 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

இங்கிலாந்து பந்துவீச்சில் ஜேம்ஸ் அண்டர்சன் 60 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களையும் மெத்யு பொட்ஸ் 105 ஓட்டங்களுக்கு 2 விக்கெடகளையும் கைப்பற்றினர்.

இங்கிலாந்து அதன் முதல் இன்னிங்ஸில் 2ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட்களை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஜோ ரூட் 31 ஓட்டங்ளைப் பெற்றதுடன் ஜொனி பெயர்ஸ்ரோவ் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

பந்துவீச்சில் ஜஸ்ப்ரித் பும்ரா 35 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார்.

இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலான 2021க்கான 5 போட்டிகள் கொண்ட தொடரில் 2 - 1 என்ற ஆட்டக் கணக்கில் இந்தியா முன்னிலையில் இருக்கிறது.




# இந்தியாவுடனான டெஸ்ட் பெயர்ஸ்ரோ அதிரடி சதம்!

பர்மிங்ஹாம், ஜூலை 04

இங்கிலாந்து - இந்தியா அணிகளுக்கு இடையிலான கடைசி டெஸ்ட் போட்டி பர்மிங்ஹாமில் நடந்து வருகிறது.

இதில் முதல் முதல் இனிங்ஸில் இந்திய அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 416 ஓட்டங்கள் எடுத்தது. இந்திய அணி தரப்பில் அதிகபட்சமாக ரிஷப் பந்த் 146 ஓட்டங்களையும், ரவிந்திர ஜடேஜா 104 ஓட்டங்களையும் குவித்தனர்.

இதனை தொடர்ந்து இங்கிலாந்து அணி தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. 2ஆம் நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து 5 விக்கெட்கள் இழப்புக்கு 84 ஓட்டங்கள் சேர்த்து திணறி வந்தது.




நேற்று தொடங்கிய 3ஆவது நாள் போட்டியில் ஒருமுனையில் பெயர்ஸ்ரோ அதிரடியாக விளையாட மறுமுனையில் ஸ்ரோக்ஸ் 25 ஓட்டங்களில் ஷர்துல் தாகூர் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

பின்னர் சாம் பில்லிங்ஸ் களமிறங்கினார். தொடர்ந்து இந்திய பந்துவீச்சாளர்களுக்கு பெயர்ஸ்ரோ சவால் அளித்தார்.

பௌண்ட்ரிகளாக விரட்டி அதிரடி காட்டிய அவர் 119 பந்துகளில் சதம் அடித்து அசத்தினார்.

# மன்செஸ்டர் யுனைற்றெட்டிலிருந்து விலக விரும்புகிறார் ரொனால்டோ?


மன்செஸ்டர், ஜூலை 04

மன்செஸ்டர் யுனைற்றெட் உதைபந்தாட்ட கழகத்தில் இருந்து கிறிஸ்ரியானோ ரொனால்டோ வெளியேற விரும்புகிறார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

போர்த்துக்கல்லை சேர்ந்த உலகின் மிகவும் பிரபல உதைபந்தாட்ட வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோவை அறியாதவர்கள் இருக்க முடியாது. இவர் கழகப் போட்டிகளில் கடந்த 2003ஆம் ஆண்டு, முதல் முறையாக மன்செஸ்டர் யுனைற்றெட் அணியில் விளையாடினார்.

பின்னர் 2009 ஆம் ஆண்டு ரியல் மட்ரிட் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட ரொனால்டோ, 2018ஆம் ஆண்டு ஜூவெண்டஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டார். மூன்று ஆண்டுகள் அந்த அணிக்காக விளையாடிய அவர், கடந்த ஆண்டு மன்செஸ்டர் அணியில் இணைந்தார்.

இந்த நிலையில் மன்செஸ்டர் யுனைற்றெட் அணியிலிருந்து கிறிஸ்ரியானோ ரொனால்டோ வெளியேற விரும்புகிறார் என்று தகவல் வெளியாகியுள்ளது. இந்த தகவலால் மன்செஸ்டர் அணி ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.



# நெருக்கடி நிலைமைகளால் திருமணம் 85 வீதம் வீழ்ச்சி!

கொழும்பு, ஜூலை 04

நாட்டில் தற்போது நிலவிவரும் பொருளாதார நெருக்கடி காரணமாக, கடந்த வருடத்தை விட திருமண பதிவு 85வீதத்தால் குறைந்துள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால், திருமண மண்டபங்கள் மற்றும் அது தொடர்பான தொழில்களில் பணிபுரியும் பலரின் வேலைகளில் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியே இதற்கான காரணம் என கண்டறியப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (ஐ)

# கடல் அலையில் சிக்கி யுவதி ஒருவர் மரணம்!

கொழும்பு, ஜூலை 04

கம்பஹா - பமுனுகம, உஸ்வெட்டகெய்யாவ பிரதேசத்தில் கடற்கரையில் நடந்து சென்ற யுவதி ஒருவர் அலையில் சிக்கி கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

குறித்த யுவதி, கடற்கரையில் உலாவச் சென்றபோதே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கடவத்தை, பியன்வில பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக விசாரணைகளை பமுனுகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# களனி மின்னுற்பத்தி நிலையத்தின் எரிபொருள் விநியோகம் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 04

கொலன்னாவை பிரதான எண்ணெய் குதத்திலிருந்து ஒருகொடவத்தை - கந்தேகொட்டுவை பிரதேசத்தில் உள்ள களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்துக்கு எரிபொருள் கொண்டு செல்லும் குழாயில் கசிவு ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இந்த கசிவு ஏற்பட்டுள்ளதாகவும், அது சரி செய்யப்பட்டு வருவதாகவும் வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## மரண அறிவித்தல்



மலர்வு 15 - 05 - 1955

உதிர்வு 30 - 06 - 2022

**அகிலன் கணபதிப்பிள்ளை**

(சரவணை மேற்கு Toronto, Canada)

யாழ். சரவணை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட அகிலன் கணபதிப்பிள்ளை அவர்கள் 30.06.2022 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகரத்தினம், சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும்,பத்மலீலா(லீலா) அவர்களின் ஆருயிர்க் கணவரும்,ஜனகன், உமையவன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,காலஞ்சென்ற ஸ்ரீதரன், அம்பிகா, நந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,சரோ, ஈசன், கரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சற்குணராஜா, கருணானந்தன், லோசனி, ரமணா ஆகியோரின் அன்பு மைத்துனரும்,சித்திரா, சாந்தி, ரகுநாதன், கலா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

**லீலா - மனைவி:** +14162999150

**உமையவன் - மகன்:** +16475457241

**நந்தினி - சகோதரி:** +16477125429

**அம்பிகா - சகோதரி:** +14166182290

**ரமணா - மைத்துனர்:** +14168944545

தகவல்:

**குடும்பத்தினர்.**

# தங்க நகைகளை விற்பவர்களின் எண்ணிக்கை சடுதியாக உயர்வு!

**கொழும்பு, ஜூலை 04**

**தங்க நகைகளை விற்பனை செய்யும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அகில இலங்கை நகை வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் மக்கள் தங்களிடம் உள்ள தங்க நகைகளை விற்பனை செய்வதாக அந்த சங்கத்தின் தலைவர் ஏ. விஜயகுமார் குறிப்பிட்டார்.

அத்துடன், புதிதாக தங்கத்தை கொள்வனவு செய்வோரின் எண்ணிக்கையும் 5 முதல் 10 சதவீதம் வரையில் வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் அவர் கூறினார். கொழும்பு செட்டியார் தெருவில் இந்த வாரம் 24 கரட் ஒரு பவுண் தங்கம் ஒரு இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அத்துடன், 22 கரட் தங்கம் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப் பட்டதாக தெரிவிக்கப்படு கிறது. (ஐ)

# பெற்றோல் தந்தால் மதுபானம் தருகிறேன்!

## இளைஞர்களை தவறாக வழிநடத்திய தொழிலதிபர்!

கொழும்பு, ஜூலை 04

இரத்தினபுரி மாவட்டத்தில் தொழிலதிபர் ஒருவர் பெற்றோல் வாங்கித் தந்தால் உங்களுக்கு மதுபானம் வாங்கித் தருகின்றேன் என்று விடுத்த அழைப்பை ஏற்று இளைஞர்கள் நிறைவேற்றினர் என்று கூறப்படுகின்றது.

இரத்தினபுரி மாவட்டம் ரக்வானா பிரதேசத்தில் மாணிக்கக்கல் சார்ந்த தொழிலதிபர் ஒருவரே இளைஞர்களை இவ்வாறு தவறாக வழிநடத்தினார் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

தொழிலதிபர், தனது காரில் ரக்வானா நகருக்கு சென்றிருந்த போது பெற்றோல் இன்மையால் வாகனம் நின்றது. அவர் ஐந்து லீற்றர் பெற்றோலை பெற முயற்சித்தும் பலன் எதுவும் கிடைக்கவில்லை.

இதனிடையே, அந்தப் பகுதியால் சென்ற சில இளைஞர்களை சந்தித்த அவர், "அதிக விலைக்கு பெற்றோலைப் பெற்றுத்தருமாறு" கோரிக்கை விடுத்தார்.

இரவு நேரமாகி விட்டதால், "ஐந்து லீற்றர் பெற்றோல் கொண்டு வந்து தந்தால், அதற்குப் பதிலாக ஐந்து போத்தல்கள் மதுபானம் வாங்கித் தரலாம்" என்று இளைஞர்களிடம் தொழிலதிபர் தெரிவித்தார்.

பின்னர், ஒரு மதுபான கடைக்குச் சென்ற தொழிலதிபர், ஐந்து மதுப் போத்தல்களை வாங்கி அந்த இளைஞர்களிடம் கொடுத்துள்ளார்.

தொழிலதிபர் இந்த கோரிக்கையை ஏற்று "சட்ட விரோதமாக எரிபொருள் விற்பனை செய்யும் நபர் ஒருவரை சந்தித்து, ஐந்து லீற்றர் பெற்றோலை அவர்கள் பெற்றுக் கொடுத்தனர்" கிராம மக்கள் தெரிவித்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ-சி)

# மருந்துகளை பகிர்ந்தளிக்கும் செயல்பாடு முற்றாக பாதிப்பு

கொழும்பு, ஜூலை 04

நாடு முழுவதும் உள்ள தனியார் மருந்தகங்களுக்கு மருந்துகளை பகிர்ந்தளிக்கும் செயல்பாடுகள் தற்போது முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன என்றுஅகில இலங்கை மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தனியார் மருந்தகங்களுக்கு போதுமான மருந்துகளை பகிர முடியாதுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் சந்திக கன்கந்த தெரிவித்தார்.

இதற்கு முன்னுரிமையளிப்பதற்கு அதிகாரிகள் இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# பிரதமர் ரணிலின் சாரதிகளும் பெற்றோலுக்காக காத்திருப்பு!

கொழும்பு, ஜூலை 04

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தடையால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சாரதிகளும் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

நாட்டைப் பொருளாதாரப் படுகுழியில் இருந்து மீட்பதற்காக மீட்பராக வந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தனது அலுவலக வாகனங்களுக்கு எரிபொருளைப் பெறுவதற்கு 12 மணித்தியாலங்கள் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

பிரதமரின் அலுவலகம் பயன்படுத்திய நான்கு வாகனங்களுக்கும் எரிபொருளைப் பெறுவதற்காக நான்கு ஓட்டுநர்களுடன் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் உள்ள வரிசைக்கு அனுப்பப்பட்டன. சில மணிநேரம் வரிசையில் நின்ற வாகன ஓட்டுநர்களுக்கு, எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டோக்கன்கள் வழங்கப்பட மாட்டாது என்பது தெரிய வந்தது. மணிக்கணக்கில் வரிசையில் காத்திருந்தும் அந்த வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கப்படவில்லை.

பின்னர், ஒரு வாகனத்தின் ஓட்டுநர் ஒருவர் பேருந்தில் பிரதமர் அலுவலகத்திற்கு சென்று, எரிபொருளைப் பெறுவதற்கான ஒரு கடிதம் மற்றும் தொடர்புடைய ஆவணங்களுடன் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு சென்றார். அந்த ஆவணங்கள் நிரப்பு நிலையத்தின் பொறுப்பு அதிகாரி ஒருவரிடம் கொடுக்கப்பட்டு, இரவு 10 மணியளவில் நான்கு வாகனங்களுக்கும் எரிபொருள் பெறப்பட்டது. அதாவது, தங்களுக்கு தேவையான எரிபொருளை பெற 12 மணி நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டியிருந்தது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்கள் வசிக்கும் தூரத்திற்கு ஏற்ப பாராளுமன்றத்துக்கு வருவதற்கு பாராளுமன்றம் எரிபொருள் வழங்குகின்றது. அத்துடன், செலவுகளும் ஏற்கப்படுகின்றன. இருப்பினும், பாராளுமன்ற உறுப்பினர்களும் சிறிது நேரம் வரிசையில் காத்திருந்து எரிபொருள் வாங்க வேண்டியுள்ளது.

இந்நிலைமையால், ஜே. வி. பி. கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது வாகனங்களுக்கு தேவையான எரிபொருளை தமது தனிப்பட்ட பணத்தை செலுத்திப் பெற்றுக் கொள்கின்றனர்.

புறக்கோட்டை, தலவத்துகொடை, பெலவத்தை ஆகிய இடங்களில் இயங்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்துதான் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி எரிபொருளைப் பெற்று வருகின்றனர் என்றும் தென்னிலங்கை தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ஐ-சி)

ஈழநாடு
Eelanadu

# அரிசி, பருப்பு, சீனிக்கு நிர்ணயவிலை விதிபடும்!



கொழும்பு, ஜூலை 04

நுகர்வோர் விவகார சபையானது அரிசி, பருப்பு மற்றும் சீனி உள் ளிட்ட பொருட்களுக்கு சட்டபூர்வ அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயம் செய்ய தீர்மானித்துள்ளது.

நுகர்வோர் விவகார சபையின் தீர்மானத்தை வர்த்தக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோவிடம் அனுமதிக்காக சமர்ப்பித்துள்ளதாக நுகர்வோர் விவகார சபையின் தலைவர் என். எஸ். எம். சம்சுதீன் தெரிவித்துள்ளார்.

மக்கள் மீதான கடுமையான சுமையை குறைக்கவும் வர்த்தகர்கள் நுகர்வோரை சுரண்டுவதற்கான வாய்ப்பைக் குறைக்கவும் நாங்கள் இந்த கொள்கை முடிவை எடுத்தோம்" என்று சம்சுதீன் கூறியுள்ளார். (ஐ)

# சுவ சரிய அம்புலன்ஸ் சேவை; நேர தாமதம் ஏற்படலாம்!

கொழும்பு, ஜூலை 04

அவசர நிலையில் நோயாளர்களை அழைத்துச் செல்ல வருகையில் 15 முதல் 20 நிமிடங்கள் வரை தாமதம் ஏற்படக்கூடும் என்று சுவ சரிய அம்புலன்ஸ் சேவை அறிவித்துள்ளது.

ஏற்கனவே நாளாந்தம் சுமார் 1000 நோயாளர் இடமாற்றங்களை வழங்கிவந்த சேவை தற்போது 1600 வரை அதிகரித்துள்ளது, இந்த அதிகரித்த தேவையை தற்போதைய டீசல் நெருக்கடியுடன் தற்போதிருக்கும் அம்புலன்ஸ்கள் மூலமே நிர்வகிக்க வேண்டியுள்ளது, எரிபொருள் பற்றாக்குறையால் சுவ சரிய ஊழியர்கள் பணி நிலையங்களுக்கு வருவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த மூன்று சிக்கல்களால் கால தாமதம் ஏற்படநேரிடலாம் என்று குறித்த சேவை பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது. தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் தங்களின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட தாமதங்கள் அல்லது அசௌகரியங்கள் ஏற்பட்டால் அவற்றைப் பொறுத்துக் கொள்ளுமாறு குறித்த சேவை கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த நெருக்கடியான காலத்திலும் பொதுமக்களுக்கு அதிகபட்ச சேவையை வழங்க அனைத்து முயற்சிகளையும் செய்வதாகவும் சுவ சரிய அம்புலன்ஸ் சேவை அறிவித்துள்ளது. (ஐ)







# நான்கு காரணங்களின் அடிப்படையில் கட்சி தலைவர்கள் இணையவேண்டும்!

## சம்பிக்க ரணவக்க எம். பி. சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 04

ராஜபக்ஷ குடும்பத்தை தவிர ஒட்டுமொத்த மக்களும் பெரும் அவல நிலையை தற்போது எதிர்கொண்டுள்ளார்கள். தற்போதைய இக்கட்டான சூழ்நிலைக்கு தீர்வு காணாவிடின் சமூகக் கட்டமைப்பில் இரத்த வெள்ளம் ஓடும் நிலை தோற்றம் பெறும். பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சி தலைவர்கள் இந்த வார காலத்துக்குள் நான்கு பிரதான யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு சிறந்த தீர்மானத்தை முன்னெடுக்க ஒன்றிணைய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் இருக்கும் வரை சர்வதேசமும் ஒத்துழைப்பு வழங்காது, வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களும் ஒத்துழைப்பு வழங்கமாட்டார்கள். நாட்டு நலனை கருத்தில் கொண்டு ஜனாதிபதி பதவி விலக வேண்டும். அல்லது விலக்கப்பட வேண்டும் என வும் வலியுறுத்தினார்.

கொழும்பில் உள்ள 43ஆவது படையணியின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், இலங்கை வரலாற்றில் என்றுமில்லாத வகையில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு இதுவரையில் ஆட்சியில் இருந்து சகல அரச தலைவர்களும், அரசாங்கங்களும் பொறுப்புக்கூற வேண்டும் என குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இதுவரையில் ஆட்சியில் இருந்த அரச தலைவர்களும், அரசாங்கங்களும் நாட்டுக்கு ஏதேனும் நன்மையை செய்துள்ளார்களே தவிர, ஜனாதிபதி



கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவர் தலைமையிலான அரசாங்கத்தை போன்று தீங்கிழைக்க வில்லை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் திறனற்ற அரசியல் நிர்வாகம் முழு நாட்டையும் இல்லாதொழித்துள்ளது.

ராஜபக்ஷ குடும்பத்தை தவிர முழு நாட்டு மக்களும் பெரும் மோசமான அவலநிலையை எதிர்கொண்டுள்ளார்கள். அரச தலைவராக தலைமைத்துவம் வகிக்கும் தார்மீக உரிமை ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவிற்கும்,ராஜபக்ஷர்களுக்கு கிடையாது. 69 இலட்ச மக்களின் ஆதரவு தமக்கு உள்ளது என ஜனாதிபதி குறிப்பிடுவது முற்றிலும் தவறானது.

நாடு மிக மோசமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. பொதுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். 4 பிரதான விடயங்களை முன்னிலைப்படுத்தி இந்த வாரத்துக்குள் ஒரு தீர்வை பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

முதலாவதாக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூல வரைவு தொடர்பில் வாதபிரதிவாதங்கள் காணப்படுகின்றன. ஜனாதிபதியின் அதிகாரங்களை வலுப்படுத்தும் வகையிலான ஏற்பாடுகள் 22ஆவது திருத்த வரைவில் காணப்படுகிறது. ஆகவே 22ஆவது வரைவு குறித்து பாராளுமன்ற தெரிவு குழு ஊடாக திருத்தத்தை செய்து வெகுவிரைவில் நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சி தலைவர்களை ஒன்றிணைத்து சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்க வேண்டும். மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைக்கமைய சர்வக் கட்சி அரசாங்கத்தின் பதவி காலம் 6 மாத காலமாக வரையறுக்கப்பட்டு, உடன் பொதுத்தேர்தலுக்கு செல்ல வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஊழியர் மட்ட ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில் இலங்கையின் அடுத்தக்கட்ட நடவடிக்கை கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. கடன் மறுசீரமைப்பு பிற்போடப்பட்டுள்ளதால் இலங்கைக்கு கடன் வழங்கிய தரப்பினர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

மூன்றாவதாக சர்வக்கட்சி அரசாங்கம் பொது கொள்கைக் கமைய ஸ்தாபிக்கப்பட வேண்டும். அரசாங்கத்தின் செயல்பாடுகளை மேற்பார்வை செய்ய சட்ட நிபுணர்களை உள்ளடக்கிய குழு ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

நான்காவது ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ ராஜபக்ஷ பதவி விலக வேண்டும். இவர் பதவியில் வைத்துக்கொண்டு எந்தப் பிரச்னைக்கும் தீர்வு காண முடியாது. ஜனாதிபதி பதவி விலகியதும் பாராளுமன்றில் 24 மணித்தியாலத்திற்குள் பதில் ஜனாதிபதி ஒருவரை நியமித்துக்கொள்ள முடியும். ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவை சர்வதேசம் அங்கீகரிக்கவில்லை.

ராஜபக்ஷர்களின் குடும்பம் முழுமையாக அரசியலில் இருந்து விலகியிருக்க வேண்டும்.

குறிப்பாக எரிபொருள் எரிவாயு மற்றும் நிலக்கரி ஆகிய கொள்வனவு விவகாரங்களில் இருந்து விலகியிருப்பது ராஜபக்ஷர்கள் நாட்டுக்கு செய்யும் மிகபெரிய உதவியாக அமையும் - என்றார். (ஐ)

# பாதாள உலகக் குழுவினரால் பொலிஸாருக்கு அச்சுறுத்தல்!

கொழும்பு, ஜூலை 04

போதைப் பொருள் சுற்றி வளைப்பு மற்றும் பாதாள உலக நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் நேரடியாக பங்கேற்ற பொலிஸார் பலருக்கு பாதாள உலக குழுவினர் ஊடாக உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டில் தொடர்ச்சியாக போதைப் பொருள் வழக்குகளின் சாட்சியாளர்கள் பலரும், போதைப் பொருள் வலையமைப்பின் உறுப்பினர்களும் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளால் கொல்லப்பட்டு வரும் பின்னணியில், உளவுத் துறையினர் இது குறித்த தகவல்களை பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளதாக அறிய முடிகிறது.

இதன்படி தற்போது பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள இரு பிரதான பொலிஸ் பரிசோதகர்கள் உட்பட பல பொலிஸாருக்கு சிறப்பு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. இவ்வாறு

பாதுகாப்பு அளிக்கப்பட்டவர்களில் மேல் மாகாணத்தில் வலயம் ஒன்றுக்கு பொறுப்பாக செயல்படும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஒருவரும் உள்ளடங்குவார் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

அத்துடன், இவ்வாறு அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் பொலிஸாருக்கு அவர்களது தனிப்பட்ட பாதுகாப்பு தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தவும் பொலிஸ் மா அதிபரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. (ஐ)

# மின் கட்டண பட்டியலுக்கு எரிவாயு வழங்கத் திட்டம்!

கொழும்பு, ஜூலை 04




சமையல் எரிவாயுவைப் பெறுவதற்காக மின்சாரக் கட்டண பட்டியலைக் கட்டாயம் சமர்ப்பிக்கும் முறைமை ஒன்றை தற்போது தயாரித்து வருவதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிவாயு கறுப்பு சந்தை மாபியாவை தடுக்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அந்த நிறுவனத் தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன்படி, ஒருவர் சமையல் எரிவாயுவைப் பெற விரும்பினால், எதிர்காலத்தில் அவரின் வீட்டின் மின் கட்டண பட்டியலை எரிவாயு விற்பனையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும்.

இதன் மூலம் மின்கட்டணத்தை சமர்ப்பித்து, எரிவாயு வழங்கிய பின், எரிவாயு சிலிண்டர் வழங்கப்பட்டதாக பில்லில் முத்திரை பதிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அமைப்பை கண்காணிக்க பொலிஸாரின் உதவியையும் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, எதிர்வரும் 5ஆம் திகதி 3 ஆயிரத்து 700 மெற்றிக் தொன் எரிவாயு இலங்கைக்கு வரவுள்ளது. அதன் விநியோகத்தை வரும் 7ஆம் துகதி தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.00 மணி : இயற்கை வழி



7.05 மணி : உளவியல் கருத்து - உளவளத்துனையாளர் யாழ்.பாவாணன்
7.15 மணி : கதைவழி அறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-நவீன சரஸ்வதி சபதம் குட்டிப்புலி
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
6.30 மணி : நலந்தானா - வைத்தியர் இளஞ்செழியபல்லவன்



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கா விவாத நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி : நேருக்கு நேர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**சிவ ஒளி**

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரீஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு